# டித்வா சூறாவளியைத் தொடர்ந்து அரசாங்கத்தின் சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகள

LST Monthly Law Tracker - Special Edition

**டித்வா சூறாவளியைத் தொடர்ந்து அரசாங்கத்தின் சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகள்**

டித்வா சூறாவளி **2025 நவம்பர் 28** ஆம் திகதி இலங்கையில் கரையைக் கடந்ததுடன், நாட்டின் உட்கட்டமைப்பு மற்றும் அனர்த்தங்களுக்கு பதிற்செயற்பாடாற்றுவதற்கான கொள்திறன் ஆகியவற்றை முடக்கிய முன்னெப்போதும் ஏற்பட்டிராத அளவிலான மழைவீழ்ச்சி, பரந்தளவிலான வெள்ளப்பெருக்கு, மற்றும் பயங்கரமான நிலச்சரிவுகள் ஆகியவற்றையும் கட்டவிழ்த்தது. இந்த வெப்ப வலய சூறாவளி கடந்து சென்ற அனைத்து 25 நிர்வாக மாவட்டங்களிலும் பாரதூரமான வெள்ளப்பெருக்கை ஏற்படுத்தியதுடன் மத்திய மலைநாட்டின் மலைச்சரிவுகளையும் ஸ்திரமற்றதாக்கியது. இதன் விளைவாக நூற்றுக்கணக்கான உறுதிப்படுத்தப்பட்ட உயிரிழப்புகள் மற்றும் காணாமற்போன ஆட்கள் பதிவாகியதுடன் வீடுகள், வாழ்வாதாரங்கள் அத்துடன் நீர், மின்சாரம், போக்குவரத்து மற்றும் சுகாதாரப் பராமரிப்பு போன்ற அத்தியாவசிய சேவைகள் ஆகியவற்றின் இழப்பின் ஊடாக பல மில்லியன் மக்களும் பாதிக்கப்பட்டனர்[1]. இடப்பெயர்வு மற்றும் பேரழிவுகளின் நோக்கெல்லையானது இலங்கையின் அண்மைக்கால வரலாற்றில் ஏற்பட்ட மிக மோசமான இயற்கை அனர்த்தங்களில் ஒன்றாக விபரிக்கப்படுகின்றது.[2] மில்லியன் கணக்கான மக்கள் இதனால் பாதிக்கப்பட்டதுடன், பல பில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பிடப்படும் கணிசமான பொருளாதார இழப்புகளும் ஏற்பட்டது.[3]

இதற்குப் பதிற்செயற்பாடாற்றும் விதத்தில், அனர்த்த நிவாரணம், மீட்டெடுப்பு, அத்தியாவசிய சேவைகளின் பேணுகை, மற்றும் பொது ஒழுங்கு ஆகியவற்றிற்கு வசதி செய்வதற்காகத் தற்போதுள்ள சட்டங்களின் கீழ் சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகளின் தொடர் ஒன்றினை இலங்கை அரசாங்கம் சட்டவாக்கம் செய்தது.

## 1. தற்போதுள்ள நியதிச்சட்ட அனர்த்த முகாமைத்துவச் சட்டகம் எதிர் டித்வாவிற்குப் பின்னரான அவசரகாலச் சட்டகம்

| அம்சம் | டித்வாவிற்கு முன்னர் | டித்வாவிற்குப் பின்னர் |
|---|---|---|
| பிரதான சட்டவாக்கம் | **2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ (DMA) சட்டம்[4]:** திட்டமிடல், ஒருங்கிணைப்பு, பதிற்செயற்பாடு, மற்றும் மீட்டெடுப்பு ஆகியவற்றிற்கான சட்டகம் ஒன்றினை ஏற்பாடு செய்யும் நாடு தழுவிய அனர்த்தச் சட்டம். | **பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்[5] (PSO) (அத்தியாயம் 40), பகுதி II: II** ஆம் பகுதி செயற்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்போது, அவசரகால ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கு சனாதிபதிக்கு வலுவூட்டுகின்றது. (பிரிவுகள் 2, 5–11).<br>**2025 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அவசரகால (நானாவித ஏற்பாடுகளும் தத்துவங்களும்) ஒழுங்குவிதிகள்[6]:** 2464/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் (2025 நவம்பர் 28) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டது[7]. |

1 https://srilankabrief.org/sri-lanka-brief-update-cyclone-ditwah-key-facts-and-lessons-learned/
2 https://news.un.org/en/story/2025/11/1166474
3 https://www.worldbank.org/en/news/press-release/2025/12/22/damage-from-cyclone-ditwah-in-sri-lanka-estimated-at-4-1-billion
4 https://www.dmc.gov.lk/images/DM_Act_English.pdf
5 https://www.lawnet.gov.lk/wp-content/uploads/leg_enact_1981/1981Y3V51C.html
6 https://documents.gov.lk/view/extra-gazettes/2025/11/2464-31_E.pdf
7 https://documents.gov.lk/view/extra-gazettes/2025/11/2464-31_E.pdf

| | | |
|---|---|---|
| நோக்கெல்லை மற்றும் நோக்கம் | சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்துப் பேரிடர்கள் மற்றும் அபாயங்களை உள்ளடக்குகின்றது; **தயார்நிலை, தணிப்பு, பதிற்செயற்பாடு, நிவாரணம், புனர்வாழ்வு, மற்றும் மீள் நிர்மாணம் ஆகியவற்றிற்கிடையே ஒருங்கிணைப்பைப் பணிக்கின்றது.** (பிரிவுகள். 4 -10). | பொதுமக்கள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் பிரகடனப்படுத்தப்படும் அவசரநிலை ஒன்றின்போது இந்த ஒழுங்குவிதிகள் பிரயோகிக்கப்படும் என்பதுடன் **பொதுமக்கள் பாதுகாப்பு, பொது ஒழுங்கைப் பேணுதல், மற்றும் அத்தியாவசிய சேவைகளின் பேணுகை** ஆகியவற்றிற்கு அவசியமானவை எனக் கருதப்படும் விசேட தத்துவங்களையும் அளிக்கின்றன. |
| பிரகடனப் பொறிமுறை | **அனர்த்தத்தின் நிலைமை:** அனர்த்தத்தின் தீவிரத்தன்மை சாதாரண கொள்திறனை விஞ்சும்போது சனாதிபதி பிரகடனம் செய்யலாம் (பிரிவு. 11(1)). பிரகடனங்கள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன் தீர்மானம் ஒன்றினால் நீடிக்கப்பட்டாலேயொழிய இரண்டு மாதங்களின் பின்னர் காலங்கடந்ததாதலும் வேண்டும் (பிரிவு. 11(2)–(4)). | **பொது அவசரகாலநிலை**: பொதுமக்கள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வர்த்தமானியின் ஊடாக சனாதிபதி பிரகடனம் செய்யலாம். அப்பிரகடனம் பொதுமக்கள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பகுதியையும் அவசரகால ஒழுங்குவிதிகளையும் வலுவிற்குக் கொண்டுவருகின்றது. **2464/30 ஆம் இலக்க வர்த்தமானி** (28 நவம்பர் 2025)[8] 2 ஆம் பகுதியை நாடு முழுவதும் தொழிற்படுத்திப் பிரகடனம் செய்கின்றது. |
| ஆளுகை அமைப்புகள் | • 2 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்டு, சனாதிபதியின் தலைமையில் செயற்படும் **தேசிய அனர்த்த முகாமைத்துவப் பேரவை (NCDM),** கொள்கை மேற்பார்வைக்கு உரியதாகும்.<br>• 8 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட **அனர்த்த முகாமைத்துவ நிலையம் (DMC)** தேசியத் திட்டங்களை நடைமுறைப்படுத்தலுக்கும் அமைச்சுக்கள் மற்றும் முகவராண்மைகளை ஒருங்கிணைப்பதற்கும் பொறுப்பாகும்.<br>• பேரவை மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் என்பவற்றிற்கு உதவுவதற்காக 9 ஆம் பிரிவின் கீழ் **தொழில்நுட்ப ஆலோசனைக் குழுக்கள்** நியமிக்கப்படலாம். | • **தகுதிவாய்ந்த அதிகாரிகள்:** ஒழுங்குவிதிகளால் அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிப்பதற்காக அவசரகால ஒழுங்குவிதிகளின் 5 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் சனாதிபதியால் நியமிக்கப்படுகின்றனர்.<br>• **அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம்:** அத்தியாவசிய சேவைகளை ஒருங்கிணைப்பதற்கும் அதிகாரிகளுக்குப் பணிப்பு விடுப்பதற்கும் 11(1) ஆம் ஒழுங்குவிதியின் கீழ் சனாதிபதியால் நியமிக்கப்படுகின்றார் (வர்த்தமானி 2464/32, 29 நவம்பர் 2025)[9].<br>*NCDM/DMC போன்ற தற்போதுள்ள அமைப்புகள், அவசரநிலைப் பணிப்புரைகளுடன் ஒத்ததாகக் காணப்படுமிடத்து மாத்திரமே தொழிற்படுகின்றன.* |
| தொழிற்பாட்டுத் தத்துவங்கள் | தேசியத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் அனர்த்தத்திற்கான பதிற்செயற்பாட்டை ஒருங்கிணைப்பதற்கும் அனர்த்த | அவசரகால ஒழுங்குவிதிகள் வலுக்கட்டாயத் தொழிற்பாட்டுத் தத்துவங்களை ஏற்பாடு செய்கின்றன: |

[8] https://documents.gov.lk/view/extra-gazettes/2025/11/2464-30_E.pdf

[9] https://documents.gov.lk/view/extra-gazettes/2025/11/2464-32_E.pdf

| | | |
|---|---|---|
| | முகாமைத்துவ நிலையத்திற்கு அனர்த்த முகாமைத்துவச் சட்டம் வலுவூட்டுகின்றது (பிரிவு 8(2)(b)) *அமைச்சுக்களும் கூட்டுத்தாபனங்களும் திட்டங்களைத் தயாரித்தல் வேண்டும் என்பதுடன் பிரகடனத்தின் மீது செயற்படுதலும் வேண்டும். ஆனால், கட்டாய சேவை, உடைமைகளைத் தேவைக்கெடுத்தல், அல்லது கட்டாய அமுலாக்கத்துடனான பிணிக்கும் கட்டளைகள் போன்ற வலுக்கட்டாயமான தத்துவங்களின் நேரடிப் பிரயோகத்திற்குச் சட்டம் அதிகாரமளிக்கவில்லை.* | • ஒழுங்குவிதி 8(1): அனர்த்த நிவாரணத்திற்காக வளவுகளைத் தேவைக்கெடுத்தல்; உடைமையாக்கி எடுப்பதற்கு ஆயுதப்படைகளின் அதிகாரிகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.<br>• ஒழுங்குவிதி 9: தேசியப் பாதுகாப்பு அல்லது அத்தியாவசிய சேவைகளுக்காகத் தகுதிவாய்ந்த அதிகாரி வாகனங்களைத் தேவைக்கெடுத்துக் கொள்ளலாம்.<br>• ஒழுங்குவிதி 10: தேசியப் பாதுகாப்பு அல்லது அத்தியாவசிய சேவைகளுக்கு உதவுவதற்காக பணியாற்றுவதற்கு அல்லது தனிப்பட்ட சேவையை வழங்குவதற்கு சனாதிபதி ஆட்களைத் தேவைப்படுத்தலாம்; இணங்கியொழுகாமை ஒரு தவறாகும்.<br>• ஒழுங்குவிதி 12: அதில் ஈடுபடும் ஆட்களைப் பணிக்கெடுப்பதை அனுமதித்து, ஏதேனும் சேவையை அத்தியாவசிய சேவையாக சனாதிபதி பிரகடனம் செய்யலாம்<br>• ஒழுங்குவிதி 48: சாதாரண சட்டத்தின் கீழ் மாவட்ட செயலாளர்களுக்கு வழமையாக உரித்தாக்கப்படும் தத்துவங்களை பிரயோகிப்பதற்கு இயலுமானவர்களாகவுள்ள ஒருங்கிணைப்பு அலுவலர்களை மற்றும் பிரதான ஒருங்கிணைப்பாளர்களை சனாதிபதி நியமிக்கலாம். |
| அமுலாக்கம் மற்றும் தவறுகள் | பிரிவு 24: தவறுகளும் சட்டத்துடன் அல்லது ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகத் தவறுவதற்கான தண்டங்களும் (உ.தா., நியதிச்சட்டக் கடமைகளுக்கு எதிரான தவறுகள்) சாதாரண சட்ட நடைமுறைகளின் ஊடாக அமுலாக்கப்படுகின்றன; சட்டத்தின் கீழ் தண்டங்கள் அபராதங்களாக அல்லது ஏனைய தடைகளாக மட்டுப்படுத்தப்படுகின்றன. | குறிப்பிட்ட தவறுகள் மற்றும் தடைகளை அவசரகால ஒழுங்குவிதிகள் உள்ளடக்குகின்றன:<br>• ஒழுங்குவிதி. 16: தண்டனைக் கோவையின் பிரிவுகளின் கீழ் குறித்துரைக்கப்படும் தவறுகளுக்காக பிடியாணையின்றித் தேடுகையிடுவதற்கான மற்றும் கைது செய்வதற்கான அதிகாரங்கள்<br>• ஒழுங்குவிதிகள் 24–28: அதிகாரிகளை எதிர்த்தல் அல்லது தடுத்தல் அல்லது உட்கட்டமைப்பைச் சேதமாக்குதல் என்பவற்றிற்கான தவறுகள்<br>• ஒழுங்குவிதி 29: அவசரகாலப் பணிப்புரைகளுக்கு முரணாக செயற்படுவதற்கான தண்டங்கள் (விதித்துரைக்கப்பட்டவாறாக சிறைத்தண்டனை மற்றும் குற்றப்பணங்கள்). |
| சட்டப் பாதுகாப்புகள் | சட்டத்தின் கீழ் நல்லெண்ணத்தில் தொழிற்படும் அலுவலர்களைப் 23 ஆம் பிரிவு பாதுகாக்கின்றது. | ஒழுங்குவிதி 49: சனாதிபதியின் சம்மதத்துடன் தவிர, அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் |

| | | |
|---|---|---|
| | | நல்லெண்ணத்துடன் புரியப்படும் செயல்களுக்காகக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படலாகாது. |
| வளவெல்லை மற்றும் காலப்பகுதி | **அனர்த்த முகாமைத்துவச் சட்டம்** ஒரு **நிரந்தர நியதிச் சட்டமாகும்;** விசேட ஏற்பாடுகள் (அனர்த்தத்தின் நிலை), பாராளுமன்ற மேற்பார்வைக்கும் நிலையான காலப்பகுதிகளுக்கும் (பாராளுமன்றத்தால் நீடிக்கப்படக்கூடிய இரண்டு மாத காலப்பகுதிகள்) உட்பட்டவை. | பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் **தற்காலிகமானதாகும்;** பொது அவசரநிலை ஒன்றினை சனாதிபதி பிரகடனம் செய்வதன் மீது அவசரகால ஒழுங்குவிதிகள் பயனுக்கு வருமென்பதுடன் பிரகடனம் நிறைவுறும்போது அவை இல்லாததாக்கப்படும். மேலும் பிரகடனங்களால் நீடிக்கப்படக்கூடியவாறாக, ஒரு மாதம் வரை II ஆம் பகுதி தொழிற்படுவதற்கு பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 2(2) ஆம் பிரிவு ஏற்பாடு செய்கின்றது. |

## 2. வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானிகள்

- **வர்த்தமானி இல. 2464/30[10], 28 நவம்பர் 2025:** அவசரகால நிலைமையொன்று நிலவுவதன் காரணமாக பாதுகாப்பு, பொது ஒழுங்கு, மற்றும் பொதுமக்களின் வாழ்வுக்கு அத்தியாவசியமான வழங்கல்கள் மற்றும் சேவைகள் என்பவற்றைப் பேணுதல் என்னும் அடிப்படையில், 2025, நவம்பர் 28 ஆம் திகதி தொடக்கம் இலங்கை பூராகவும் நடைமுறைக்கு வரும் வகையில், *பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் (PSO)* 2 ஆம் பிரிவின் கீழ் அதன் பாகம் 11 இனை செயற்பாட்டிற்குக் கொண்டுவரும் வகையில் பிரகடனம் ஒன்றை சனாதிபதி வெளியிட்டார்.

- **வர்த்தமானி இல. 2464/31[11], 28 நவம்பர் 2025:** பகிரங்க அமைப்புகள் மற்றும் சேவை வழங்குநர்களுக்குப் பிணிப்புடைய பணிப்புரைகளை வழங்குதல், ஒத்துழைப்பு மற்றும் தகவல்களைக் கோருதல், எரிபொருள், உணவு, மின்சாரம், மற்றும் நீர் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் வழங்கலைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல், மற்றும் அவசரநிலைக் காலப்பகுதியின்போது அத்தியாவசிய சேவைகளுக்கான இடையூறைத் தவிர்ப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பவற்றிற்காக அங்கீகாரமளிக்கப்பட்ட அமைச்சர்கள், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம், மற்றும் ஏனைய குறித்துரைக்கப்பட்ட அலுவலர்களுக்குத் தற்காலிக தத்துவங்களை வழங்கி, பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் கீழ் *2025 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க அவசரகால (நானாவித ஏற்பாடுகளும் தத்துவங்களும்) ஒழுங்குவிதிகளை* சனாதிபதி பிரகடனம் செய்தார்.

- **வர்த்தமானி இல. 2464/29[12], 28 நவம்பர் 2025:** டித்வா சூறாவளியின் விளைவாக ஏற்பட்ட தீவிரமான சீரற்ற காலநிலையின்போது மின்சாரம் வழங்கல், எரிபொருள் மற்றும் எரிவாயு வழங்கல், வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார பராமரிப்பு சேவைகள், பயணிகள் மற்றும் பொருட்களைக் கொண்டுசெல்வதற்கான பொதுப் போக்குவரத்து, வீதி, புகையிரத மற்றும் வான்வழிப் போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை உட்கட்டமைப்பு, நீர் மற்றும் வடிகாலமைப்புச் சேவைகள், உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் வழங்கல், பிரதான களமட்ட அலுவலர்கள் (பிரதேச செயலகங்கள், கிராம அலுவலர், சமுர்த்தி, விவசாய, மற்றும் சமூக அலுவலர்கள்), நோயாளர் காவு வண்டி சேவைகள், இலங்கை மத்திய வங்கி உட்பட அரச வங்கி மற்றும் காப்புறுதிச் சேவைகள், நீர், மின்சாரம்,

[10] https://documents.gov.lk/view/extra-gazettes/2025/11/2464-30_E.pdf
[11] https://documents.gov.lk/view/extra-gazettes/2025/11/2464-31_E.pdf
[12] https://documents.gov.lk/view/extra-gazettes/2025/11/2464-29_E.pdf

வடிகால், கழிவுநீர் வடிகால், கழிவு சேகரிப்பு, தீயணைப்பு மற்றும் நோயாளர் காவு வண்டி சேவைகள் ஆகியவற்றிற்கான உள்ளூராட்சி சேவைகள், நீர்ப்பாசனம் தொடர்பான சேவைகள், தொலைத்தொடர்பு மற்றும் ஊடக சேவைகள், தாழ்நிலங்களை மீட்டெடுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல், அத்துடன் விவசாய சேவைகள் மற்றும் விவசாயக் காப்புறுதி ஆகியவற்றை **அத்தியாவசியப் பொதுச் சேவைகளாகப்** பிரகடனம் செய்து, *1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொது சேவைகள் சட்டத்தின்* கீழ் கட்டளை ஒன்றை சனாதிபதி வெளியிட்டார். இந்தச் சேவைகளுக்கு ஏற்படுத்தப்படும் ஏதேனும் இடையூறு இச்சட்டத்தின் கீழ் தவறு ஒன்றாகக் கருதப்படும்.

- **வர்த்தமானி இல. 2464/32[13], 29 நவம்பர் 2025:** அவசரகால ஒழுங்குவிதிகளின் கீழ் **அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகமாக** இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அலுவலர் ஒருவரான திரு. பீ. கே. பிரபாத் சந்திரகீர்த்தியை சனாதிபதி நியமித்ததுடன், நாடு முழுவதும் அத்தியாவசிய சேவைகளின் வழங்கல், தொடர்ச்சி, மற்றும் பேணுகை தொடர்பான அனைத்துச் செயற்பாடுகளையும் ஒருங்கிணைப்பதற்கும் மேற்கொள்வதற்கும் அவருக்கு அதிகாரமளித்தார்.

- **வர்த்தமானி இல. 2465/08[14], 2 டிசம்பர் 2025:** பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இறப்புப் பதிவு, நிர்வாக ஆவணப்படுத்தல், மற்றும் நிவாரண விநியோகம் ஆகியவற்றைத் துரிதப்படுத்துவதற்கு வசதி செய்யும் வகையில், டித்வா சூறாவளியின் தாக்கத்தினால் ஏற்பட்ட மண்சரிவு மற்றும் வெள்ளத்தின் காரணமாக, கண்டி, நுவரெலியா, பதுளை, குருநாகல், மாத்தளை, கேகாலை, கம்பஹா, கொழும்பு, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், பொலநறுவை, மன்னார், புத்தளம், இரத்தினபுரி, மொனராகலை, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, கிளிநொச்சி, வவுனியா, மற்றும் களுத்துறை உள்ளிட்ட **22 நிர்வாக மாவட்டங்களைத் தேசிய அனர்த்தத்திற்கு உள்ளான பிரதேசங்கள்** என *2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இறப்புகளைப் பதிவு செய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின்* கீழ் பதிவாளர் நாயகம் பிரகடனம் செய்தார்.

- **வர்த்தமானி இல. 2465/16[15], 4 டிசம்பர் 2025:** பொருட்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அல்லது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு ஒப்படைக்கப்பட்டு, சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்படுமிடத்தும், அவற்றின் உத்தேசிக்கப்பட்ட நோக்கத்திற்காக விநியோகம் செய்யப்படும்வரை பொறுப்பில் காணப்படுமிடத்தும், அத்துடன் திறைசேரியின் அங்கீகாரமின்றி விற்கப்படாது, இடமாற்றப்படாது, அல்லது அகற்றப்படாது இருக்குமிடத்தும், டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக "அனர்த்த மீட்டெடுப்புக் கருத்திட்டத்திற்கான" உதவியாக அல்லது நன்கொடைகளாக பெறப்படும் அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிக்காக **விசேட வியாபாரப் பண்ட அறவீட்டிற்கு** விலக்களித்து *2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின்* கீழான கட்டளை ஒன்றினை நிதி அமைச்சு வெளியிட்டது; இந்த விலக்களிப்பு 2025 டிசம்பர் 5 ஆம் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்கு செல்லுபடியாகும்.

- **வர்த்தமானி இல. 2467/51[16],17 டிசம்பர் 2025:** 2025, நவம்பர் 28 ஆம் திகதியிலிருந்து அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட்ட அவசரகாலத் தத்துவங்களுக்கு அரசியலமைப்பு மற்றும் பாராளுமன்ற வலிதாக்கலை ஏற்பாடு செய்யும் 2025, டிசம்பர் 5 ஆம் திகதியிலிருந்து *பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின்* 11 ஆம் பகுதியை நடைமுறைப்படுத்திச் செயற்படுத்திய சனாதிபதியின் பிரகடனத்தைப் பாராளுமன்றம் உத்தியோகபூர்வமாக அங்கீகரித்தது.

- **வர்த்தமானி இல. 2468/30[17], 26 டிசம்பர் 2025:** நிலவுகின்ற அவசரநிலையின்போது, கொழும்பு, கம்பஹா, கண்டி, யாழ்ப்பாணம், காலி, திருகோணமலை, மட்டக்களப்பு,

---

[13] https://documents.gov.lk/view/extra-gazettes/2025/11/2464-32_E.pdf
[14] https://documents.gov.lk/view/extra-gazettes/2025/12/2465-08_E.pdf
[15] https://documents.gov.lk/view/extra-gazettes/2025/12/2465-16_E.pdf
[16] https://documents.gov.lk/view/extra-gazettes/2025/12/2467-51_E.pdf
[17] https://documents.gov.lk/view/extra-gazettes/2025/12/2468-30_E.pdf

மற்றும் ஏனையவற்றை உள்ளடக்கிய பல்வேறு நிர்வாக மாவட்டங்கள் முழுவதும், அத்துடன் அவற்றை அடுத்துள்ள ஆள்புல நீர்ப்பரப்பிலும் பொது ஒழுங்கினைப் பேணுவதற்கு சிவில் அதிகாரிகளுக்கு உதவுவதற்காக, *பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின்* 12 ஆம் பகுதியின் கீழ் இலங்கை இராணுவம், கடற்படை மற்றும் வான்படையை அழைப்பதற்கு 2025, டிசம்பர் 27 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் சனாதிபதி அங்கீகாரமளித்தார்.

- **வர்த்தமானி இல. 2468/45[18], 28 டிசம்பர் 2025:** நிலவும் சீரற்ற காலநிலை மற்றும் அனர்த்த நிலைமைகளின்போது அவசரகாலத் தத்துவங்கள் மற்றும் பொது ஒழுங்கின் தொடர்ச்சியை உறுதிப்படுத்துவதற்காக, கட்டளைச்சட்டத்தின் 11 ஆம் பகுதியை இலங்கை முழுவதும் நடைமுறைப்படுத்திச் செயற்படுத்தி, பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் நாடளாவிய பொது அவசரகாலநிலை ஒன்றினை சனாதிபதி பிரகடனம் செய்தார்.

- **வர்த்தமானி இல. 2468/46[19], 28 டிசம்பர் 2025:** நிலவுகின்ற அனர்த்த மீட்டெடுப்புக் காலப்பகுதியின்போது முக்கியமான சேவைகளின் இடையூறற்ற விநியோகத்தை சட்டரீதியாக மீள வலியுறுத்துவதற்காக, மின்சாரம், எரிபொருள், நீர், சுகாதாரப் பராமரிப்பு, பொதுப் போக்குவரத்து, பெருந்தெருக்கள், துறைமுகங்கள், உணவு வழங்கல், வங்கி மற்றும் காப்புறுதி, தொலைத்தொடர்பாடல், விவசாயம், நீர்ப்பாசனம், உள்ளூராட்சி சேவைகள், மற்றும் அவசரகால சேவைகளை *1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின்* கீழ் **அத்தியாவசிய பொதுச் சேவைகளாக** சனாதிபதி மீளவும் பிரகடனம் செய்தார்.

- **வர்த்தமானி இல. 2469/09[20], 31 டிசம்பர் 2025:** மூலோபாய தலைமைத்துவத்தை வழங்குதல், நாடளாவியரீதியில் அனர்த்தத்திற்குப் பிந்திய புனர்வாழ்வு, மீட்டெடுப்பு, மற்றும் புனரமைப்பு என்பவற்றை ஒருங்கிணைத்தல், அடிப்படைச் சேவைகள், உட்கட்டமைப்பு, வீடமைப்பு, வாழ்வாதாரங்கள் மற்றும் உள்ளூர் பொருளாதாரங்கள் என்பவற்றை மேற்பார்வை செய்தல், ரீபில்டிங் ஸ்ரீலங்கா நிதியம் உள்ளடங்கலான நிதிகளை முகாமை செய்தல், தரவு மற்றும் தீர்மானங்களுக்கான ஆதரவு முறைமைகளைத் தாபித்தல், துறைசார் உப குழுக்களை நியமித்தல், மற்றும் முன்னேற்றத்தைக் காலத்துக்குக்காலம் சனாதிபதிக்கு அறிக்கையிடல் ஆகியவற்றை அதற்குக் குறித்தொதுக்கி, *அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையின் கீழ்* **இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கான (ரீபில்டிங் ஸ்ரீலங்கா) செயலணியை** சனாதிபதி தாபித்தார்.

## 3. அமைச்சரவைத் தீர்மானங்கள்

- **01 டிசம்பர் 2025[21] – "ரீபில்டிங் ஸ்ரீலங்கா நிதியத்தைத்" தாபித்தல் (நிதி, திட்டமிடல், மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு):** டித்வா சூறாவளியைத் தொடர்ந்து புனர்வாழ்வு, மீட்டெடுப்பு, மற்றும் மீள் நிர்மாணம் ஆகியவற்றிற்கு நிதியளிப்பதற்காகவென ஒதுக்கப்பட்ட ரீபில்டிங் ஸ்ரீலங்கா நிதியம் ஒன்றினைத் தாபிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. இந்த நிதியம் சனாதிபதி செயலகத்தின் கீழான நியதிச்சட்ட நிதியம் ஒன்றாக ஆக்கப்பட்டுள்ளதுடன் அதற்கெனத் தனியாக ஒதுக்கப்பட்ட வங்கிக் கணக்கு ஒன்றின் ஊடாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நன்கொடையாளர்களின் பங்களிப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கிக்கு ஏற்கனவே கைமாற்றப்பட்டுள்ள பொதுத் திறைசேரியின் நிதிகளிலிருந்து ஆரம்ப மூலதனம் வழங்கப்பட்டுள்ளது. அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வீடமைப்பு, பொது உட்கட்டமைப்பு, விவசாயம், மீன்பிடி, வாழ்வாதாரங்கள், மற்றும் அத்தியாவசிய சேவைகள் என்பவற்றின் புனரமைப்பிற்கு ஆதரவு வழங்குவதற்கு நிதியத்திற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

---

[18] https://documents.gov.lk/view/extra-gazettes/2025/12/2468-45_E.pdf

[19] https://documents.gov.lk/view/extra-gazettes/2025/12/2468-46_E.pdf

[20] https://documents.gov.lk/view/extra-gazettes/2025/12/2469-09_E.pdf

[21] https://www.dgi.gov.lk/images/2025/12/Cabinet_Decisions_on_01.12.2025_E.pdf

- **01 டிசம்பர் 2025[22] – திடீர் அனர்த்த நிலைமை காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குதல் (நிதி, திட்டமிடல், மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு):** அனர்த்தக் காலப்பகுதி 2025, நவம்பர் 21 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கின்றவாறாகக் கருதி, டித்வா புயலினால் ஏற்பட்ட சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்ட பிரசைகளுக்கான உடனடி அவசர உதவி நடவடிக்கைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. 550 மில்லியன் ரூபாவைக் கொண்ட மேலதிக வரவுசெலவுத்திட்ட ஏற்பாடுகள் நிவாரணத் தொழிற்பாடுகளுக்காக அங்கீகரிக்கப்பட்டது. குடும்பம் ஒன்றிற்கான வாராந்த உலர் உணவு உதவித்தொகையானது, குடும்ப அங்கத்தினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், இதுவரை வழங்கப்பட்ட 1,800 ரூபா தொடக்கம் 3,600 ரூபா வரையிலான தொகையிலிருந்து 2,100 ரூபா தொடக்கம் 10,500 வரையிலான தொகையாக அதிகரிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட சமுதாயங்களில் அவசர நிவாரணம், தற்காலிக உதவி மற்றும் வாழ்க்கை நிலைமைகளை வழமைக்குக் கொண்டுவரச்செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்கான அங்கீகாரங்கள் மற்றும் தொழிற்பாட்டு வழிகாட்டலை வழங்குவதற்குத் திறைசேரியின் செயலாளர் வலுவூட்டப்பட்டுள்ளார்.

- **10 டிசம்பர் 2025[23] – MSME அனர்த்த நிவாரணக் கடன்களின் ஒன்றுதிரட்டல் மற்றும் நடைமுறைப்படுத்தல் (RE-MSME PLUS) (நிதி, திட்டமிடல், மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு):** அனர்த்தத்திற்குப் பின்னர் **நுண், சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகளின் மீட்டெடுப்பிற்கு** ஆதரவளிப்பதற்காக RE-MSME PLUS கடன் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலை அமைச்சரவை அங்கீகரித்தது. SMILE-III, E-FRIEND-II, மற்றும் RE-MSME உள்ளடங்கலான முன்னைய கடன் நிகழ்ச்சித்திட்டங்களை இத்திட்டம் ஒன்றுதிரட்டுவதுடன், அண்ணளவாக 130,000 தொழில்முயற்சியாளர்களுக்குப் பயனளிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. மூன்று வருடகால மீளச் செலுத்தும் காலப்பகுதி, 3 வீதம் என்னும் வருடாந்த வட்டி வீதம், மற்றும் ஆறு மாத கருணைக்காலம் ஆகியவற்றுடன் கடன்கள் வழங்கப்படுகின்றன. வியாபார மீட்டெடுப்பிற்கு உடனடித் தொழிற்பாட்டு மூலதனத்தை வழங்குவதற்காக, நுண் தொழில்முயற்சிகளுக்கு ரூ. 250,000, அத்துடன் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகளுக்கு ரூ. 1,000,000 என்னும் அதியுச்ச கடன் வரையறைகள் காணப்படுகின்றன.

- **10 டிசம்பர் 2025[24] – பேரிடரால் பாதிக்கப்பட்ட மத வழிபாட்டிடங்களைத் துப்புரவு செய்தல் மற்றும் அவற்றிற்கான ஆதரவு (புத்த சாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு):** டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட மத வழிபாட்டிடங்களை மீட்டெடுப்பதற்கான நிதி உதவிக்கான ஏற்பாட்டை அமைச்சரவை அங்கீகரித்தது. பாதிக்கப்பட்ட ஒவ்வொரு மத வழிபாட்டிடமும் துப்புரவு செய்வதற்கான செலவுகளுக்காகவும் மத செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதை இயலச் செய்வதற்குமென ரூ. 25,000 இனைப் பெறுவதற்கு உரித்துடையதாகும். சமுதாயத்தை வழமைக்குக் கொண்டுவருதல் மற்றும் மத அனுஷ்டானங்களைத் தொடர்தல் என்பவற்றிற்கு ஆதரவளிப்பதை இலக்காகக் கொண்டுள்ள இந்த நடவடிக்கையை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சிற்கு வரவுசெலவுத்திட்ட ஏற்பாடுகள் குறித்தொதுக்கப்பட்டன.

- **10 டிசம்பர் 2025[25] – உலக வங்கியினால் நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களைப் பயன்படுத்தி, அவசரகால பதிற்செயற்பாட்டு ஆக்கக்கூறுகளை செயற்படுத்தல் (நிதி, திட்டமிடல், மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு):** டித்வா சூறாவளியுடன் தொடர்புடைய **வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவுகளுக்குப் பிந்திய மீட்டெடுப்பிற்கு**

---

[22] https://www.dgi.gov.lk/images/2025/12/Cabinet_Decisions_on_01.12.2025_E.pdf
[23] https://www.dgi.gov.lk/images/2025/12/11/Cabinet_Decision_on_10.12.2025_English.pdf
[24] https://www.dgi.gov.lk/images/2025/12/11/Cabinet_Decision_on_10.12.2025_English.pdf
[25] https://www.dgi.gov.lk/images/2025/12/11/Cabinet_Decision_on_10.12.2025_English.pdf

ஆதரவு வழங்குவதற்காக தற்போதுள்ள உலக வங்கியினால் நிதியளிக்கப்படும் கருத்திட்டங்களின் பயன்பாட்டை அமைச்சரவை அங்கீகரித்தது. இதற்கான நிதி 92-112 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிதிகள், குறிப்பாக அனர்த்தம் ஏற்படக்கூடிய மற்றும் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் சேதமடைந்த வீதிகள், பாலங்கள், பொதுக் கட்டடங்கள், மற்றும் ஏனைய பிரதான உட்கட்டமைப்புகளின் புனரமைப்பு மற்றும் மீள்நிர்மாணத்திற்காகப் பயன்படுத்தப்படவுள்ளன.

- **10 டிசம்பர் 2025[26] – ஆசிய பசுபிக் அனர்த்தப் பதிற்செயற்பாட்டு நிதியத்திலிருந்தான மானியம் (நிதி, திட்டமிடல், மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு):** ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆசிய பசுபிக் அனர்த்தப் பதிற்செயற்பாட்டு நிதியத்திலிருந்தான 3 மில்லியன் அமெரிக்க டொலர் மானியம் ஒன்றினை ஏற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. இந்த மானியம் அவசர நிவாரணத் தொழிற்பாடுகளுக்கு நிதியளிப்பதுடன், டித்வா சூறாவளியினால் பாதிக்கப்பட்ட சமுதாயங்களுக்கான அத்தியாவசிய சேவைகளின் பேணுகைக்கும் ஆதரவு வழங்கும். ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் அவசியமான ஒப்பந்தங்களை இறுதி செய்து கைச்சாத்திடுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

- **29 டிசம்பர் 2025[27] – விரிவான அனர்த்த நிவாரணக் கடன் திட்டம் (விரிவுபடுத்தப்பட்ட உள்ளடக்கம்) (நிதி, திட்டமிடல், மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு):** நடுத்தர மற்றும் பாரியளவிலான தொழில்முயற்சிகள் உள்ளடங்கலாக, பேரிடரால் பாதிக்கப்பட்ட அனைத்துத் தொழில்முயற்சியாளர்களையும் உள்ளடக்குவதற்காக, தற்போதுள்ள RE-MSME அனர்த்த நிவாரணக் கடன் திட்டத்தின் நீட்டிப்பிற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. 3 வீதம் என்னும் வருடாந்த வட்டி வீதமொன்றில், மூன்று வருடகால மீளச்செலுத்தற் காலப்பகுதியொன்றுடனும் ஆறு மாத கருணைக்காலமொன்றுடனும் கடன்கள் வழங்கப்படும். நுண் தொழில்முயற்சிகளுக்கு ரூ. 250,000, சிறு தொழில்முயற்சிகளுக்கு ரூ. 1 மில்லியன், நடுத்தர மற்றும் பாரியளவிலான தொழில்முயற்சிகளுக்கு ரூ. 25 மில்லியன் என்னும் வகையில் அதியுச்சக் கடன் தொகைகள் காணப்படும். அதனை நடைமுறைப்படுத்துவதற்காக ரூ. 5 பில்லியன் என்னும் மொத்த ஒதுக்கீடொன்று அங்கீகரிக்கப்பட்டது.

## 4. இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான சனாதிபதி செயலணி

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட பேரழிவின் விளைவாக நாடு முழுவதும் உயிரிழப்புகள், காயங்கள், அத்துடன் தனியார் மற்றும் அரச சொத்துக்களுக்கும் பெருமளவிலான சேதம் ஏற்பட்டமையால் அதற்குப் பதில்வினையாற்றும் முகமாக, *அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையின்* கீழ் வெளியிடப்பட்ட **2025 டிசம்பர் 31 ஆம் திகதிய 2469/09 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியினால்**[28], **இலங்கையைக் மீளக்கட்டியெழுப்புவதற்கான (ரீபில்டிங் ஸ்ரீலங்கா) சனாதிபதி செயலணியை** இலங்கையின் சனாதிபதி உத்தியோகபூர்வமாகத் தாபித்தார்.

"இலங்கையை மீளக்கட்டியெழுப்புதல் (ரீபில்டிங் ஸ்ரீலங்கா)" சட்டகத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்து அனர்த்தத்திற்குப் பிந்திய புனர்வாழ்வு, மீட்டெடுப்பு, மற்றும் புனரமைப்பு முன்னெடுப்புகளுக்கான மூலோபாய தலைமைத்துவம், தேசிய ஒருங்கிணைப்பு, ஓர் ஒத்திசைவான அணுகுமுறை மற்றும் அவற்றின் மேற்பார்வை ஆகியவற்றை வழங்குவதற்கு இந்த செயலணிக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**உள்ளடக்கம்**

---

[26] https://www.dgi.gov.lk/images/2025/12/11/Cabinet_Decision_on_10.12.2025_English.pdf
[27] https://www.dgi.gov.lk/images/2025/12/30/Cabinet_Decisions_on_29.12.2025_E.pdf
[28] https://www.dgi.gov.lk/images/2025/12/31/2469-09_E.pdf

பின்வருவோர் உள்ளடங்கலான அமைச்சரவை அமைச்சர்கள், சிரேஷ்ட மாகாணத் தலைமைத்துவம், பிரதான அமைச்சுகளின் செயலாளர்கள், மற்றும் சிரேஷ்ட சனாதிபதி ஆலோசகர்கள் ஆகியோரை செயலணி உள்ளடக்கியிருந்தது:

- பிரதம அமைச்சர் (தவிசாளர்)
- வெளிநாட்டு அலுவல்கள்; பொது நிர்வாகம் மற்றும் உள்ளூராட்சி; கமத்தொழில், கால்நடைகள், காணி, மற்றும் நீர்ப்பாசனம்; கிராமிய அபிவிருத்தி மற்றும் சமூகப் பாதுகாப்பு; கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி; போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் நகர அபிவிருத்தி; சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடகம்; தொழில் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதியமைச்சர்; சுற்றாடல்; வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் நீர் வழங்கல் ஆகிய விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்கள்
- மேல் மாகாணத்தின் ஆளுநர்
- பாதுகாப்புப் பிரதி அமைச்சர்
- சனாதிபதியின் செயலாளர்
- செயலாளர், நிதி, திட்டமிடல், மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
- செயலாளர், பாதுகாப்பு அமைச்சு
- அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம்
- சனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர்
- அரச தகவல் பணிப்பாளர் நாயகம்
- மேலதிகமாகப் பெயரிடப்பட்ட தொழில்வாண்மையாளர்கள் மற்றும் சட்ட நிபுணர்கள்

செயலணியின் செயலாளர்/அமைப்பாளராக **ஜீ. எம். ஆர். டீ. அபொன்சு** நியமிக்கப்பட்டுள்ளார்.

**செயலணியின் பிரதான பணிகள்**

பின்வரும் பொறுப்புக்கள் செயலணிக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளன:

- தேசிய மீள்கட்டுமானத்தில் ஒட்டுமொத்த கொள்கை வழிகாட்டலை வழங்குதல் மற்றும் மூலோபாயத் தீர்மானங்களை மேற்கொள்ளல்.
- அமைச்சுக்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்புப் பிரச்சினைகளைத் தீர்த்தல்.
- முக்கியமான நிதி, மீட்டெடுப்பு, மற்றும் புனரமைப்புத் தேர்வுகளை வழிநடத்துதல்.
- தேசிய மீட்டெடுப்பு மற்றும் மீள்நிர்மாண நிகழ்ச்சித்திட்டங்களின் நடைமுறைப்படுத்தலை மேற்பார்வை செய்தல்.

இந்தத் தொழிற்பாடுகள் குறிப்பாகப் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- அடிப்படைத் தேவைகள், சுகாதாரம், மற்றும் துப்புரவு ஏற்பாடுகள் ,ஆகியவற்றை மீண்டும் நிலைநாட்டுதல்.
- அடிப்படை உட்கட்டமைப்பை மீண்டும் கட்டியெழுப்புதல்.
- வாழ்வாதாரம் மற்றும் சொத்துக்களை மேம்படுத்துதல்.
- உள்ளூர் பொருளாதாரத்தை மீட்டெடுத்தல்.
- டிஜிட்டல் தரவு முறைகள் மற்றும் முடிவுகளுக்கான ஆதரவுப் பொறிமுறையை தாபித்தல்.
- தொடர்பாடல் மற்றும் பங்கீடுபாட்டாளர் ஈடுபாட்டை மேம்படுத்துதல்.

**தத்துவங்களும் அறிக்கையிடலும்**

செயலணியின் உறுப்பினர்களுக்குப் பின்வருவனவற்றிற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது:

- குறித்தொதுக்கப்பட்ட பணிகளை மேற்கொள்வதற்கு அவசியமான விசாரணைகளை மேற்கொள்ளல் மற்றும் அறிவுறுத்தல்களை வழங்குதல்.
- பகிரங்க அலுவலர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து உதவியைப் பெற்றுக்கொள்ளல்.
- குறித்தொதுக்கப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றுதல் மீதான பருவகால முன்னேற்ற அறிக்கைகளை சனாதிபதிக்கு சமர்ப்பித்தல்.

**உப குழுக்களைத் தாபிப்பதற்கான அதிகாரம்**

தீர்மானங்களை செயற்படுத்துவதற்கும் நடைமுறைப்படுத்தலைக் கண்காணிப்பதற்கும் உரிய துறைசார் அமைச்சர்களின் தலைமையில், துறைகளுக்கு உரித்தான **உப-குழுக்களைத்** தாபிப்பதற்கு செயலணிக்கு வலுவூட்டப்பட்டுள்ளது.

பின்வரும் உப குழுக்கள் அவசியமானவை என வர்த்தமானி இனங்கண்டுள்ளது:

- **அனர்த்தத்துக்குப் பிந்தைய தேவைகளின் மதிப்பீட்டிற்கான குழு**

பௌதிகச் சேதங்கள், பொருளாதாரத் தாக்கங்கள், மற்றும் சமூகத் தாக்கங்கள் தொடர்பான தரவுகளைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றிற்குப் பொறுப்பானது.

- **பொது உட்கட்டமைப்பு மறுசீரமைப்புக் குழு**
  தொழில்நுட்ப தராதரங்கள் மற்றும் அனர்த்தத்திலிருந்து மீண்டெழுந்தன்மையைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றை உறுதிப்படுத்தி, போக்குவரத்து, மின்சாரம், நீர், நீர்ப்பாசனம், சுகாதாரம், கல்வி, மற்றும் தொலைத்தொடர்பாடல் முறைமைகள் ஆகியவற்றின் புனரமைப்பு மற்றும் மீள் நிர்மாணம் ஆகியவற்றை மேற்பார்வை செய்தல்.
- **பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கான வீட்டுவசதி மறுசீரமைப்புக் குழு**
  வீட்டு வசதி மீட்டெடுப்புத் திட்டம் மற்றும் ஒன்றுதிரட்டப்பட்ட தொழில்நுட்ப மற்றும் நிதி வளங்கள் என்பவற்றின் அடிப்படையில், வீடுகளை மீண்டும் கட்டியெழுப்புதல் அல்லது பாதுகாப்பான வலயங்கள் மற்றும் பொதுவான சேவைகள் காணப்படும் பிரதேசங்களில் வீடுகளை நிர்மாணிப்பதற்கு ஆதரவை வழங்குதல்.
- **உள்ளூர் பொருளாதார மற்றும் வாழ்வாதார மறுமலர்ச்சிக் குழு**
  வாழ்வாதாரங்களை நிலைப்படுத்தல், வழங்கற் சங்கிலிகளின் மீட்டெடுப்பு, நிதி அணுகலுக்கான மேம்பாடு, மற்றும் பொருளாதார மீட்டெடுப்பு மூலோபாயங்களின் அபிவிருத்தி ஆகியவற்றிற்கு வழிகாட்டல்
- **சமூக உட்கட்டமைப்பு மறுசீரமைப்புக் குழு**
  நோய்த்தடுப்பு மற்றும் நிவாரண முகாம்களின் நிலைமைகள் என்பவற்றைக் கண்காணிக்கும் அதேவேளை கல்வி, சுகாதாரம், நீர், துப்புரவேற்பாடு, மற்றும் நலன்புரிச் சேவைகளின் புனர்நிர்மாணத்தை ஒருங்கிணைக்கின்றது.
- **நிதி மற்றும் நிதியளிப்புக் குழு**
  ரீபில்டிங் ஸ்ரீலங்கா நிதியத்தின் ஆளுகைக் குழுவை நியதிச்சட்ட நிதியம் ஒன்றாக முறைசார்ந்ததாக ஆக்குவதுடன், நிதி திரட்டுதல், வரவுசெலவுத்திட்டத்தை ஆக்குதல், நன்கொடையாளர்களின் ஒருங்கிணைப்பு, நிதி ஒதுக்கீடு, மற்றும் தேசிய அரசிறைச் சட்டகத்தினுள் வெளிப்படையான நிதி முகாமைத்துவம் என்பவற்றிற்கான அளவுருக்களையும் உருவாக்குகின்றது.
- **தரவு மற்றும் தகவல் முறைமைக் குழு**
  முன்னுரிமைகளை அடையாளம் காணல், மீட்டெடுப்புத் திட்டமிடலுக்கு வழிகாட்டுதல், நடைமுறைப்படுத்தலைக் கண்காணித்தல், மற்றும் சான்று அடிப்படையிலான தீர்மானம் மேற்கொள்ளலுக்கு ஆதரவளித்தல் என்பவற்றிற்காக தரவுத் தளங்கள் மற்றும் பகுப்பாய்வு முறைமைகளைத் தாபித்தல்.
- **பொதுமக்கள் தொடர்பாடல் குழு**
  ஒருங்கிணைக்கப்பட்ட பொதுமக்கள் தொடர்பாடல் மற்றும் பங்கீடுபாட்டாளர் ஈடுபாட்டு மூலோபாயம் ஒன்றினை விருத்தி செய்து நடைமுறைப்படுத்துகின்றது.

டித்வா சூறாவளியினால் ஏற்பட்ட பரவலான சேதத்தைத் தொடர்ந்து நாட்டின் புனர்நிர்மாண முயற்சிகளை ஒருங்கிணைப்பதற்காக சனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் தலைமையின் கீழ், **2026, சனவரி 13 ஆம் திகதி,** கொழும்பில் உள்ள பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் **"ரீபில்டிங் ஸ்ரீலங்கா" தேசிய நிகழ்ச்சித்திட்டம்** உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. மேற்பார்வை செய்தல் என்னும் செயலணியின் வகிபங்கின் தொழிற்பாட்டுத் தொடக்கத்தை இந்த ஆரம்பம் குறித்ததுடன், தற்போதுள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்களை இந்நோக்கங்களுக்காகப் பயன்படுத்தல், **2026 ஆம் ஆண்டிற்கான ரூ. 500 பில்லியன் குறைநிரப்பு மதிப்பீடு** ஒன்றின் கீழ் மேலதிக வரவுசெலவுத்திட்ட வளங்களை ஒதுக்கீடு செய்தல், அத்துடன் *ரீபில்டிங் ஸ்ரீலங்கா நிதியத்தின்* ஊடாக உள்நாட்டு, வெளிநாட்டு, பொது, மற்றும் தனியார் நன்கொடைகளின் ஆதரவை ஒன்றுதிரட்டுதல் ஆகிய பல்முனை நிதியிடல் மூலோபாயத்தையும் கொண்டுள்ளது[29].

மீள் நிர்மாணத்திற்கான நிதியிடலுக்கு ஆதரவளிப்பதற்காக, சனாதிபதி செயலகத்தின் கீழ் ஒரு **நியதிச்சட்ட ரீபில்டிங் ஸ்ரீலங்கா நிதியம்** ஆரம்பிக்கப்பட்டதுடன், நிதியத்தை நிர்வகித்தல், தேவைப்பாடுகளை மதிப்பீடு செய்தல், முன்னுரிமைகளை அமைத்தல், வளங்களை ஒதுக்குதல், மீட்டெடுப்புச் செயற்பாடுகளுக்கான பிரித்தளிப்புகளை மேற்பார்வை செய்தல், மற்றும் கணக்காய்வு உள்ளிட்ட வெளிப்படைத்தன்மை மிக்க நிதித் தொழிற்பாடுகளை உறுதிப்படுத்தல்

[29] https://www.presidentsoffice.gov.lk/rebuilding-sri-lanka-national-initiative-launched-under-the-patronage-of-the-president

என்பவற்றிற்காக **2025 டிசம்பர் 1 ஆம் திகதி**[30] அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் அரச மற்றும் தனியார் துறைகளின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு **முகாமைத்துவக் குழுவும்** நியமிக்கப்பட்டது. **கலாநிதி அனில் ஜயந்த பர்னாந்து** (தலைவர்), **ஜீ. எம். ஆர். டீ. அபொன்சு** (அமைப்பாளர்), **ஹனீப் யூசுப், கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, துமிந்த ஹுலங்கமுவ, சுகீஷ்வர குணரத்ன, மொஹான் பண்டிதகே, கிரிஷான் பாலேந்திரா, கலாநிதி பராக்கிரம திசாநாயக்க, அஷ்ரப் ஒமர்,** மற்றும் **இஷார நாணயக்கார** மற்றும் ஏனையோர் இவர்களுள் உள்ளடங்குவர்[31].

பொதுமக்களின் பங்குபற்றல், நன்கொடையாளர்களின் ஈடுபாடு, மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றிற்கு வசதி செய்வதற்காக, அரசாங்கம், உத்தியோகபூர்வ **ரீபில்டிங் ஸ்ரீலங்கா நிதியக் கண்காணிப்பு இணையத்தளத்தை ஆரம்பித்தது (www.rebuildingsrilanka.gov.lk)**. இந்தத் தளமானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நன்கொடையாளர்கள் **நிதிப் பங்களிப்புகளை** மேற்கொள்வதற்கும், **பொருட்கள், காணி, மற்றும் ஏனைய வளங்களை** நன்கொடையாக வழங்குவதற்கும், அத்துடன் அவர்களின் பங்களிப்புகள், கருத்திட்டத்தின் முன்னேற்றம், மாவட்டரீதியான மீள் நிர்மாணச் செயற்பாடுகள், உத்தியோகபூர்வ அறிவித்தல்கள், மற்றும் நிதியத்தின் பயன்பாடு என்பவை தொடர்பான தகவல்களைக் கண்காணிப்பதற்கும் அவர்களை அனுமதிக்கின்றது.[32]

செயலணியின் தொழிற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களின் பகுதியாக, டித்வா சூறாவளியினால் தங்களின் வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு ஆதரவளிப்பதற்காக ரீபில்டிங் ஸ்ரீலங்கா செயற்பாடுகளின் கீழ் **2026 சனவரி 9 ஆம் திகதி "கருத்திட்டம் 5M" வீடமைப்பு இழப்பீடு மற்றும் நிர்மாண முன்னெடுப்பினை** ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிகழ்வு அனுராதபுர மாவட்டத்தில் இடம்பெற்றதுடன், முழுமையாக அழிவடைந்த வீடுகளுக்கான இழப்பீடு வழங்கல் மற்றும் புதிய நிர்மாணத்தின் வைபவரீதியான ஆரம்பம் என்பவற்றையும் உள்ளடக்கியது. 2026 ஆம் ஆண்டின் தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் ஏற்கனவே திட்டமிடப்பட்ட ஏறத்தாழ **31,000 வீடுகளுக்கு** மேலதிகமாக, **20,000 முதல் 25,000 புதிய வீடுகள்** தேவைப்படும் என அரசாங்கம் மதிப்பிடுகின்றது.[33]

2026, சனவரி 26 ஆம் திகதியில் உள்ளவாறாக, **ரீபில்டிங் ஸ்ரீலங்கா நிதியம்** மொத்தத் தொகையாக **5,942,467,000 ரூபா** மற்றும் **9,982,703 அமெரிக்க டொலர்களைத் திரட்டியுள்ளது.**[34]

### 5. அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் அலுவலகம்

**2025, நவம்பர்** பிற்பகுதியில் ஏற்பட்ட **டித்வா சூறாவளியை** உடனடுத்து, தேசிய மீட்டெடுப்பு முயற்சிகளை ஒருங்கிணைப்பதற்கும் அவசரகாலகால நிலைமைகளின் கீழ் வாழ்வை நிலைநிறுத்தும் சேவைகளின் தொடர்ச்சியை உறுதிப்படுத்துவதற்குமென **அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் அலுவலகத்தை**[35] இலங்கை அரசாங்கம் தாபித்தது. பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் முழுவதிலும் முக்கியமான சேவைகளின் புனரமைப்பு மற்றும் பல் முகவராண்மை அனர்த்தப் பதிற்செயற்பாடு என்பவற்றை ஒருங்கிணைப்பதற்காக **பிரதம அமைச்சரின் அலுவலகத்தினுள் இயங்கும் ஒரு மத்திய தொழிற்பாட்டு மையமாக** இந்த அலுவலகம் சனாதிபதியால் நிறுவப்பட்டது.

போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு; கமத்தொழில், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு; வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் நீர்வழங்கல் அமைச்சு; அத்துடன் இலங்கைப் புகையிரதத் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய நீர்

[30] https://www.dgi.gov.lk/images/2025/12/Cabinet_Decisions_on_01.12.2025_E.pdf
[31] https://www.news.lk/news/management-committee-of-the-rebuilding-sri-lanka-fund-appointed-with-representatives-from-the-public-and-private-sectors
[32] https://www.presidentsoffice.gov.lk/online-portal-launched-to-provide-information-on-the-rebuilding-sri-lanka-national-programme
[33] https://rebuildingsrilanka.gov.lk/article.php
[34] https://rebuildingsrilanka.gov.lk/
[35] https://documents.gov.lk/view/extra-gazettes/2025/11/2464-31_E.pdf

வழங்கல், வடிகாலமைப்புச் சபை, இலங்கை மின்சார சபை, மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் போன்ற தொடர்புடைய முகவராண்மைகள் உள்ளடங்கலாக, முப்படைகளின் பிரதிநிதித்துவத்தின் ஆதரவில், பிரதான துறைகள் மற்றும் அரசாங்க நிறுவனங்களிடையேயான ஒருங்கிணைப்பு முயற்சிகளுக்கான பொறுப்பை ஆணையாளர் நாயகம் **பீ. கே. பிரபாத் சந்திரகீர்த்தி**[36] ஏற்றார்

டித்வா சூறாவளியினால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு உதவி வழங்கும் அபிவிருத்திப் பங்காளர்கள், அரச சார்பற்ற அமைப்புகள், மற்றும் சிவில் சமூக அமைப்புகளுடனான ஒருங்கிணைப்பை வலுப்படுத்துமாறு **2025, டிசம்பர் 8 ஆம் திகதியிடப்பட்ட CGES/2025/10**[37] என்னும் பணிப்புரையினால் அனைத்து மாவட்டச் செயலாளர்களுக்கும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அறிவுறுத்தினார். உதவிகளின் புவியில்சார் விநியோகத்தில் ஏற்றத்தாழ்வுகள் காணப்பட்டமையை இந்தப் பணிப்புரை பதிவு செய்வதுடன் சரிபார்க்கப்பட்ட தேவைகள் மற்றும் கள மட்ட மதிப்பீடுகள் என்பவற்றின் அடிப்படையில் ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்படுவதையும் தேவைப்படுத்துகின்றது. தாபிக்கப்பட்ட சட்ட மற்றும் நிறுவனஞ்சார் பொறிமுறைகளுடன், மாவட்ட மட்டத்திலான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கும், இடையீடுகள் இரட்டிப்பாவதைத் தடுப்பதற்கும், அத்துடன் உயர் தாக்கம் செலுத்தும் நடவடிக்கைகளுக்கு வசதி செய்வதற்கும் பங்காளர்களுடன் பணியாற்றுவதற்கு மாவட்டச் செயலாளர்கள் தேவைப்படுத்தப்படுகின்றனர். நிவாரண, புனர்வாழ்வு, மீள் நிர்மாண, மற்றும் மீட்டெடுப்புக் கட்டங்கள் முழுவதும் பங்காளர்களின் ஈடுபாடு தேவைப்படுத்தப்படுகின்றது என்பதையும், பிரதம அமைச்சரின் அலுவலகம் மற்றும் உரிய அரசாங்க முகவராண்மைகளின் ஒத்துழைப்புடன், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் அலுவலகத்தின் ஊடாக ஒருங்கிணைப்பு ஏற்பாடுகளினதும் தொழிற்பாட்டுத் தடைகளினதும் மீளாய்வுகள் மேற்கொள்ளப்படும் எனவும் பணிப்புரை மேலும் உறுதிப்படுத்துகின்றது.

- **30 நவம்பர் 2025 – பொதுப் பயன்பாட்டுச் சேவைகளை மீட்டளித்தல் (ஊடக வெளியீடு)**[38]
  உட்கட்டமைப்பு சேதத்தை மதிப்பீடு செய்து, உணவு மற்றும் அத்தியாவசிய சேவைகளின் பற்றாக்குறைகளை அடையாளம் காண்பதுடன் உடனடியாக நிவர்த்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு அவற்றின் முன்னேற்றத்தை அறிக்கையிடுமாறும் மாகாணங்களின் பிரதம செயலாளர்களுக்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் பணிப்புரை விடுக்கப்பட்டது. மாகாணங்கள் முழுவதும் உள்ளூராட்சி நிறுவனங்களிடையே உபகரணங்கள் மற்றும் ஆளணியினரை இடமாற்றிக் கொள்வதற்கான அதிகாரம் வழங்கப்பட்டது. விநியோகத்தில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதுடன் செயற்றிட்டங்களையும் சமர்ப்பிக்குமாறு மாவட்ட செயலாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. வழங்கற் சங்கிலியில் காணப்படும் இடையூறுகளை நிவர்த்தி செய்வதற்காக, 3,955 மெட்ரிக் தொன் எரிவாயுவை (LP gas) ஏற்றி வந்த கலமொன்று அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் சரக்கிறக்கம் செய்வதற்கு அங்கீகாரமளிக்கப்பட்டதுடன், உணவுக் கையிருப்புகளை விநியோகம் செய்வதற்காக சிலாபத்தில் லங்கா சதொச நிறுவனத்தின் களஞ்சியம் ஒன்றினைத் திறப்பதற்கும் புத்தளம் மாவட்டச் செயலாளருக்கு அனுமதி வழங்கப்பட்டது.

- **01 டிசம்பர் 2025 – விலைச் சுரண்டலைத் தடுத்தல் (ஊடக வெளியீடு, கோப்பு இல. 2025/02)**[39]
  அனர்த்தம் தொடர்பில் ஏற்பட்ட பற்றாக்குறை நிலைமைகளைச் சுரண்டும் வகையில் நுகர்வுப் பொருட்களை மிகவும் அதிகமான விலைகளில் சில வியாபாரிகள் விற்பதற்கு முயற்சிப்பதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இத்தகைய நடைமுறைகள், அத்தியாவசிய சேவைகள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்களின் கீழ் சட்டவிரோதமானவை எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. நியாயமற்ற விலையிடல்கள், பொருட்களை அளவுக்கதிகமாக சேர்த்து வைத்தல், பொருட்களை மறைத்து வைத்தல், அல்லது

---

[36] https://documents.gov.lk/view/extra-gazettes/2025/11/2464-32_E.pdf

[37] https://civilsocietycollectiveforemergencyresponse.wordpress.com/wp-content/uploads/2025/12/ngo-coordination-1.pdf

[38] https://ocges.gov.lk/pdf/2025-01-E.pdf

[39] https://ocges.gov.lk/pdf/2025-02-E.pdf

ஏனைய தீங்கு விளைவிக்கும் வியாபார நடைமுறைகளில் ஈடுபடும் தனியாட்கள் அல்லது வியாபாரங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவித்தல் வழங்கப்பட்டது. தொடர்ச்சியாக வழங்கலை மேற்கொள்ளுமாறும், அதியுச்ச சில்லறை விலையில் (குறிக்கப்பட்டிருக்குமிடத்து) பொருட்களை விற்குமாறும், ஏனைய அனைத்துப் பொருட்களுக்கும் நியாயமான விலைகளை உறுதிப்படுத்துமாறும் வியாபாரிகள் அறிவுறுத்தப்பட்டனர்.

- **01 டிசம்பர் 2025 – அனர்த்த நிவாரண மற்றும் மீட்டெடுப்பு நடவடிக்கைகள் (ஊடக வெளியீடு, கோப்பு இல. 2025/03)[40]**
  அனர்த்தத்துடன் தொடர்புடைய இறப்புகள் மற்றும் காணாமற்போன ஆட்களைப் பதிவு செய்வதை இயலச் செய்வதற்காக, 2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இறப்புகளின் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை "தேசிய அனர்த்தப் பிரதேசங்கள்" என பதிவாளர் நாயகம் வர்த்தமானியில் வெளியிடுவார் என அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்தார். அத்தகைய இறப்புகளைப் பதிவு செய்யும் அதிகாரம் மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளது. வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தான 108 வீதிகள் புனரமைக்கப்பட வேண்டியுள்ளதாக அறிக்கையிடப்பட்டதுடன், இடையூறற்ற வழங்கலை உறுதிப்படுத்துவதற்காக லிட்ரோ காஸ் நிறுவனத்துடன் கலந்துரையாடல்களும் நடத்தப்பட்டன. பற்றாக்குறையாக உள்ள அத்தியாவசியப் பொருட்களின் பட்டியல்களை வெளியிடுமாறும் நன்கொடையாளர்களின் ஒருங்கிணைப்பிற்காக நடுத்தர காலத் தேவைகளை பிரதம அமைச்சரின் அலுவலகத்திற்கு அனுப்புமாறும் மாவட்ட செயலாளர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது. சுங்க மற்றும் வரிச் சலுகைகளைப் பெறுவதற்காக வெளிநாட்டு நன்கொடைகள் அனர்த்த முகாமைத்துவ நிறுவனத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்படும். விவசாயத் திணைக்களத்தின் தராதரங்களைப் பூர்த்தி செய்யும் உறைய வைக்கப்பட்ட மரக்கறி வகைகளை இறக்குமதி செய்வதற்கும் அரசாங்கம் தீர்மானித்தது.

- **02 டிசம்பர் 2025 – பொதுவசதிகள், வீதிகள், நீர் மற்றும் தொடர்பாடல்களின் இற்றைப்படுத்தல் (ஊடக வெளியீடு, கோப்பு இல. 2025/04)[41]**
  வீதிகள் தடைப்பட்ட காரணத்தினால் சில பிரதேசங்களில் தாமதங்கள் காணப்பட்டபோதும், தடையற்ற தேசிய வழங்கலை லிட்ரோ காஸ் உறுதிப்படுத்தியதுடன் நாளாந்த விநியோகத்தை 75,000 இலிருந்து 91,00 சிலிண்டர்களாகவும் அதிகரித்தது. பதுளை மற்றும் கண்டியில் ஐந்து நீர் விநியோகத் திட்டங்கள் புனரமைப்பிற்காக எடுத்துக்கொள்ளப்பட்டன. நாடளாவியரீதியில் உள்ள 2.95 உள்ளக நீர் இணைப்புகளில், ஏறத்தாழ 388,000 இணைப்புகள் தடைப்பட்டிருந்தன. அண்ணளவாக 20 வீதமான தொலைத்தொடர்பு சேவைகள் பாதிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் புனரமைப்பு மின்சார விநியோகத்துடன் தொடர்புபட்டிருந்தது. இன்றைய திகதியளவில், 256 தடைப்பட்ட வீதிகளில் 231 வீதிகள் மீளத் திறக்கப்பட்டுள்ளன. அணுகல் காணப்படாத பிரதேசங்களுக்கு உணவு மற்றும் நீர் விநியோகம் மேற்கொள்வதற்கு இலங்கை வான்படையின் உதவி பயன்படுத்தப்பட்டது.

- **03 டிசம்பர் 2025 – நன்கொடையாளர்களின் ஒருங்கிணைப்பு மற்றும் தரவு முறைமைகள் (ஊடக வெளியீடு, கோப்பு இல. 2025/05)[42]**
  மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள் தங்களது தரவு முறைமைகளை பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் அவர்களது குறிப்பிட்ட தேவைகள் என்பன பற்றிய துல்லியமான தகவல்களுடன் இற்றைப்படுத்தியுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் நன்கொடையாளர்களுக்கு அறிவித்தார். எந்தவொரு தனியாள் அல்லது பிரதேசமும் தவறவிடப்படாதிருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு, இலக்கு வைக்கப்பட்ட, சமநிலையான, மற்றும் முறைமைசார் ஆதரவு வழங்கப்படுவதற்காக இந்தச் செயலகங்களின் ஊடாக உதவிகளை ஒருங்கிணைக்குமாறு நன்கொடையாளர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

---

[40] https://ocges.gov.lk/pdf/2025-03-E.pdf
[41] https://ocges.gov.lk/pdf/2025-04-E.pdf
[42] https://ocges.gov.lk/pdf/2025-05-E.pdf

- **03 டிசம்பர் 2025 – டித்வா சூறாவளியின் தாக்க மதிப்பீடு மற்றும் மீட்டெடுப்பு நடவடிக்கைகள் (ஊடக வெளியீடு, கோப்பு இல. 2025/06)[43]**

தங்களது அட்டவணைப்படுத்தப்பட்ட கிளினிக் விஜயங்கள், சிகிச்சைகள், அல்லது மருத்துவப் பரிசோதனைகளைத் தவறவிட்ட நோயாளிகளுக்கு அனர்த்தக் காலப்பகுதிக்குப் பின்னர், முன்னுரிமை அடிப்படையில் புதிய திகதிகள் வழங்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. விவசாயம், நீர்ப்பாசனம், வீதிகள், பாலங்கள், புகையிரதப் பாதைகள், மின்சாரம், மற்றும் தொலைத்தொடர்பாடல் ஆகியவற்றிற்குக் குறிப்பிடத்தக்களவிலான சேதங்கள் ஏற்பட்டிருந்தமை அறிக்கையிடப்பட்டுள்ளது. 1,593 கிலோமீற்றர் நீளமான புகையிரத வலையமைப்பில் 478 கிலோமீற்றர் மாத்திரமே தொழிற்பாட்டில் காணப்பட்டது. சேதமடைந்த தொலைபேசி இணைப்புகளில் ஏறத்தாழ 91 வீதமானவையும் பாதிக்கப்பட்ட 72 வீதமான மின்சார நுகர்வோரின் இணைப்புகளும் புனரமைக்கப்பட்டுள்ளன. தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் கட்டமைப்புசார் மதிப்பீடுகளை மேற்கொண்டதுடன், காலநிலைப் பதிற்செயற்பாட்டு மீட்டெடுப்பு, மற்றும் மீள்நிர்மாண முதலீட்டுத் திட்டம் ஒன்றினைத் தயாரிப்பதற்குத் தேசியத் திட்டமிடல் திணைக்களத்திற்கு அறிவுறுத்தப்பட்டது.

- **06 டிசம்பர் 2025 – தேசிய அத்தியாவசிய சேவைகள் அழைப்பெண் (ஊடக வெளியீடு, கோப்பு இல. 2025/02)[44]**

மின்சாரம், எரிபொருள், வைத்தியசாலைகள், மற்றும் அவசர மருத்துவ சேவைகள், பொதுப் போக்குவரத்து மற்றும் வழங்கல்கள், நீர் மற்றும் துப்புரவேற்பாடு, உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள், தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், நீர்ப்பாசனம் அத்துடன் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஏனைய அத்தியாவசிய சேவைகள் ஆகியவை தொடர்பான சிரமங்களை அறிக்கையிடுவதற்காக **1904** என்னும் ஒரு துரித அழைப்பெண் சேவை ஆரம்பிக்கப்பட்டது. CGES செயற்பாட்டு மையத்தில் இந்த அழைப்புகள் பெறப்படுவதுடன், அவை சரிபார்க்கப்பட்டு, முன்னுரிமைப்படுத்தப்பட்டு உரிய துறைசார் பதிற்செயற்பாட்டு அணியினருக்கும் அனுப்பப்படுகின்றன.

- **09 டிசம்பர் 2025 – உட்கட்டமைப்பு, நீர்ப் பாதுகாப்பு, சர்வதேச ஒருங்கிணைப்பு மற்றும் வழங்கல்கள் (ஊடக வெளியீடு, பி.ப. 09.30, கோப்பு இல. 2025/08)[45]**

நாடளாவியரீதியில், பாதிக்கப்பட்டதாக அடையாளம் காணப்பட்ட 298 வீதிப் பிரிவுகளில், 288 வீதிகள் மீளத் திறக்கப்பட்டுள்ளன. வீதிகள், பாலங்கள், மதகுகள், குளங்கள், அணைக்கட்டுகள் மற்றும் கட்டங்களின் திருத்தவேலைகளைத் துரிதப்படுத்துவதற்காக, 2025, டிசம்பர் 1 ஆம் திகதி முதல் 2026, மார்ச் வரையான காலப்பகுதிக்கு, சமுதாய அடிப்படையிலான அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தங்களுக்கான நிதி வரம்பினை ரூ. 2 மில்லியனிலிருந்து ரூ. 5 மில்லியனாக அதிகரிக்குமாறு தேசிய பெறுகை ஆணைக்குழுவிற்குத் தெரிவிக்கப்பட்டது. சமுதாய நீர் வழங்கல் திட்டங்களைப் புனரமைப்பதற்காக சேறு அகற்றிகளை (sludge pumps) அவசரமாகக் கொள்வனவு செய்வதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன், 2025 ஆம் ஆண்டினுள் பூர்த்தி செய்யப்பட முடியாத நீர்க் கருத்திட்டங்களின் நிரந்தரப் புனரமைப்பிற்காக 2026 இற்கான நிதிகளை ஒதுக்குமாறு நிதி ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. இடையூறற்ற நீர் வழங்கலை உறுதிப்படுத்துவதற்காக, இராணுவ மற்றும் மாகாண நீர்த்தாங்கிகளும் தனியாரின் தாங்கிகளும் பயன்படுத்தப்பட்டன. துரித மதிப்பீடுகள், வழங்கல்களுக்கான ஆதரவு, மற்றும் இடம்பெயர்ந்தோரைக் கண்டறிதல் என்பவற்றிற்காக UNDP, UNOPS, மற்றும் IOM உள்ளடங்கலான சர்வதேசப் பங்காளர்கள் ஈடுபடுத்தப்பட்ட அதேவேளை, தேசியத் திட்டமிடல் திணைக்களம் அனர்த்தத்திற்குப் பிந்திய தேவைகளின் மதிப்பீட்டினையும் ஆரம்பித்தது. உள்நாட்டு, வெளிநாட்டு நன்கொடைகளைக் களஞ்சியப்படுத்துவதற்காக மேலதிக களஞ்சியங்கள் ஒதுக்கப்பட்டன. 2025 டிசம்பர் நண்பகல் அளவில், 1904 துரித அழைப்பெண்ணின்

[43] https://ocges.gov.lk/pdf/2025-06-E.pdf

[44] https://ocges.gov.lk/pdf/2025-07-E.pdf

[45] https://ocges.gov.lk/pdf/2025-08-E.pdf

ஊடாக 1,340 முறைப்பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், அண்ணளவாக 99 வீதமான தேசியத் தொடர்பாடல் வலையமைப்புகளும் மீளவும் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 6. நிவாரணம்

### A. உடனடி அனர்த்த நிவாரணம்

உடனடி அனர்த்த நிவாரணத்தின் ஒழுங்குபடுத்தல், ஒருங்கிணைப்பு, மற்றும் நடைமுறைப்படுத்தல் என்பவற்றை ஆளுகை செய்யும் பிரதான நிர்வாகக் கருவியை ஆக்கவமைப்புச் செய்யும் **01/2025 ஆம் இலக்க அனர்த்த நிவாரண சேவைகள் சுற்றறிக்கையை[46]**, அதனுடன் இணைந்த திருத்தம் ஒன்றுடன்[47], 2025 நவம்பர் 28 ஆம் திகதி அரசாங்கம் வெளியிட்டது. அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள், அத்துடன் அனர்த்தப் பதிற்செயற்பாட்டில் ஈடுபடும் அனைத்துப் பகிரங்க அலுவலர்கள் ஆகியோருக்குப் பிரயோகிக்கப்படத்தக்க கட்டாயத் தொழிற்பாட்டுச் சட்டகம் ஒன்றினை இந்த சுற்றறிக்கை தாபிக்கின்றது.

உரிய மாவட்டத்தினுள் மேற்கொள்ளப்படும் உடனடி நிவாரணத் தொழிற்பாடுகளுக்கான ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பு அதிகாரியாக மாவட்டச் செயலாளரை இச்சுற்றறிக்கை பெயர் குறிப்பதுடன் மாவட்டத்தினுள் தொழிற்படும் அனைத்து நிரல் முகவராண்மைகளினதும் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் சுற்றறிக்கையின் குறிக்கோள்களுக்கு மேலதிகமாக பிரதேச செயலாளர்களுக்குத் தொழிற்பாட்டுப் பணிப்புரைகளை வழங்குதல் என்பவற்றிற்கான அதிகாரத்தையும் மாவட்ட செயலாளருக்கு உரித்தாக்குகின்றது.

இந்தச் சுற்றறிக்கையை நடைமுறைப்படுத்திச் செயற்படுத்துவதற்காக, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு அத்துடன் பொது நிர்வாகம், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு என்பவற்றின் அங்கீகாரத்துடன், 2025 டிசம்பர் 6 ஆம் திகதி விரிவான **துரிதப்படுத்தப்பட்ட அனர்த்த நிவாரண நடவடிக்கைகளுக்கான வழிகாட்டல்களை**[48] வெளியிட்டது. இந்த வழிகாட்டல்கள் 2025/01 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு மேலதிகமானவை என்பதுடன், பின்வருவன உள்ளடங்கலாக அனைத்துத் துறைகளிலும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான குறித்த அறிவுறுத்தல்களையும் வழங்குகின்றன:

- நிவாரண விநியோகத்தில் மாவட்ட மற்றும் பிரதேச அனர்த்த முகாமைத்துவக் குழுக்களின் வகிபங்கு மற்றும் பொறுப்புக்கள்;
- காணி உரித்துடைமை அல்லது வருமான மட்டம் ஆகியவற்றைக் கருத்திற் கொள்ளாது, ஒரே தடவையில் வழங்கப்படும் மொத்த உதவித்தொகை விநியோகம் உள்ளடங்கலான அவசரகாலப் படிகளை விநியோகிப்பதற்கான நடைமுறைகள் ஏற்புடையனவான அமையும்.
- பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்கள், சேதமடைந்த வீடுகள், இழந்த வாழ்வாதாரங்கள், மற்றும் இடம்பெயர்ந்த ஆட்கள் மீதான பூர்வாங்க மதிப்பீட்டிற்கான பணிகளின் ஒதுக்கீடு;
- காசுப் படிகள் மற்றும் ஏனைய நிவாரணங்கள் வழங்கப்படும்போது எழும் தொழிற்பாட்டுப் பிரச்சினைகளைக் கண்காணிப்பதற்கும் தீர்ப்பதற்குமான அறிவுறுத்தல்கள்;
- நியாயாதிக்கங்களிடையேயான நிவாரணத் தொழிற்பாடுகளின் தொடர்ச்சியான நடைமுறைப்படுத்தலுக்காக மாவட்டக் குழுக்கள் மற்றும் பிரதேசக் குழுக்களிடையே ஒருங்கிணைப்புப் பொறிமுறைகள்.

### B. நிவாரண நிதியளிப்பிற்கான பாராளுமன்ற மற்றும் வரவுசெலவுத்திட்ட அங்கீகாரமளிப்பு

[46] http://www.ndrsc.gov.lk/web/phocadownload/disaster%20relief%20services%20circular%20012025.pdf
[47] https://sinhala.dgi.gov.lk/images/2025/28/Disaster_Relief_Services_circular_Amendment_01-2025.pdf
[48] https://civilsocietycollectiveforemergencyresponse.wordpress.com/wp-content/uploads/2025/12/disaster_relief_services_guideline_012025.pdf

டித்வா சூறாவளியினால் எழுந்த அவசரகால நிலையைத் தொடர்ந்து, அவசரகால நிதித் தேவைகளைப் பரிசீலிப்பதற்காக பாராளுமன்றத்தின் விசேட அமர்வு ஒன்றினைக் கூட்டுவதற்காக **2025, டிசம்பர் 12 ஆம் திகதியிடப்பட்ட 2466/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியை**[49] பாராளுமன்றத்தின் சபாநாயகர் வெளியிட்டார். 16 ஆம் நிலையியற் கட்டளையின் பிரகாரம், இந்த விசேட அமர்வு 2025, டிசம்பர் 18 ஆம் திகதி இடம்பெறுவதற்கும், அதனைத் தொடர்ந்து குறைநிரப்பு மதிப்பீடு ஒன்றினை அங்கீகரிப்பதற்காக 2025, டிசம்பர் 19 ஆம் திகதி அதன் தொடர்ச்சி இடம்பெறுவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது.

அரசாங்கம் ஆரம்பத்தில் **ரூபா 500 பில்லியன் மேலதிக குறைநிரப்பு மதிப்பீடு** ஒன்றினை சபைக்கு சமர்ப்பித்தது. நிரல் அமைச்சுக்கள் அத்துடன் மாகாண மற்றும் மாவட்ட நிர்வாகங்கள் என்பவற்றினால் மேற்கொள்ளப்பட்ட இற்றைப்படுத்தப்பட்ட சேத, இழப்பு, மற்றும் தேவைகளின் மதிப்பாய்வினைத் தொடர்ந்து, **ரூபா 500 பில்லியன் திருத்தப்பட்ட மேலதிக குறைநிரப்பு மதிப்பீடொன்று** சமர்ப்பிக்கப்பட்டது. திருத்தப்பட்ட குறைநிரப்பு மதிப்பீட்டிற்குப் பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கியதுடன், அதன் மூலம் திரட்டு நிதியத்திலிருந்து அறவிடத்தக்கதான மேலதிக ஒதுக்கீடுகளுக்கும் அங்கீகாரமளித்தது[50].

### C. நிதித் துறைக்கான நிவாரணம் மற்றும் வங்கியியல் ஒழுங்குவிதிகள்

டித்வா புயலினால் பாதிக்கப்பட்ட தனியாட்கள் மற்றும் வியாபாரங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அனைத்து உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளுக்கான **2025 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிச் சுற்றறிக்கையை**[51] 2025, டிசம்பர் 5 ஆம் திகதி இலங்கை மத்திய வங்கி வெளியிட்டது. இதன் பிரதான தேவைப்பாடுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- மூலதனம் மற்றும் /அல்லது வட்டி மீள்கொடுப்பனவு மீது ஆறு மாதங்கள் வரையான கடன் தவணை நீடிப்பு.
- தண்டம் அல்லது மேலதிக வட்டியொன்றை அறவிடாது கடன்களை மறுசீரமைத்தல் அல்லது மீள் அட்டவணைப்படுத்தல்.
- அனர்த்தம் தொடர்பான தாமதங்களின் காரணமாக சொத்து வகைப்படுத்தல் தரமிறக்கப்படாமை.
- புனர்வாழ்வு அல்லது மீட்டெடுப்பிற்கான புதிய சலுகைக் கடன் வசதிகளின் பரிசீலனை.
- வங்கிகள், தகுதி வாய்ந்த கடன் பெறுநர்களை அடையாளம் காணல் வேண்டும், பதிவுகளைப் பேணுதல் வேண்டும், மற்றும் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்குக் காலத்திற்குக்காலம் அறிக்கைகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

இதே நிவாரண நடவடிக்கைகளை உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பனிகள், விசேட குத்தகைக் கம்பனிகள், மற்றும் ஏனைய வங்கிகள் அல்லாத நிதி நிறுவனங்களுக்குப் பிரயோகிக்கும் வகையில், 2026, சனவரி 9 ஆம் திகதி **2026 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க நிதிக் கம்பனி மற்றும் விசேட குத்தகைக் கம்பனிச் சுற்றறிக்கையை[52]** மத்திய வங்கி வெளியிட்டது. வங்கிகள் அல்லாத நிதி நிறுவனங்களினது கடன் தவணை நீடிப்பு, மறுசீரமைப்பு, சொத்து வகைப்படுத்தல், புதிய வசதிகள், மற்றும் மேற்பார்வைத் திணைக்களத்திற்கு அறிக்கையிடுதல் என்பவற்றிற்கும் இந்த நிறுவனங்கள் இதே தேவைப்பாடுகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

### D. தேசிய அரசிறை நிவாரணம் மற்றும் தொழில்முயற்சிகளுக்கான இழப்பீடு

[49] https://documents.gov.lk/view/extra-gazettes/2025/12/2466-33_E.pdf

[50] https://mawratanews.lk/news/speaker-convenes-special-parliament-sitting-to-approve-rs-1000-bn-supplementary-estimate-for-cyclone-relief/

[51] https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/bsd_circular_no_4_of_2025_e.pdf

[52] https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/laws/cdg/snbfi_circular_no_1_of_2026_e.pdf

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, தேசிய அரசிறை அதிகாரமாகத் தொழிற்பட்டு, டித்வா சூறாவளியினால் பாதிக்கப்பட்ட தனியாட்கள், குடும்பங்கள், மற்றும் தொழில்முயற்சிகளுக்கான அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படும் ஒரு நிதி உதவி நிகழ்ச்சிட்டத்தைத் தாபித்து, 2025, டிசம்பர் 5 ஆம் திகதி, **08/2025 ஆம் இலக்க வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கையை**[53] வெளியிட்டது. அங்கீகரிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகள் மற்றும் நிகழத்தக்கவற்றிற்கான ஏற்பாடுகள் என்பவற்றிலிருந்து பின்வருவனவற்றிற்காக செலவினங்களை மேற்கொள்வதற்கு கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் பிரதான கணக்கீட்டு அலுவலர்களுக்கு இச்சுற்றறிக்கை அங்கீகாரமளிக்கின்றது:

- வீடு சுத்தம் செய்வதற்கான உதவி;
- அத்தியாவசிய வீட்டு உபயோகப் பொருட்களைப் பதிலீடு செய்தல்;
- தற்காலிகமாக இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான வாழ்க்கைப் படிகள்;
- வாழ்வாதாரங்களை மீட்டெடுப்பதற்கான மானியங்கள்; மற்றும்
- பங்குபற்றும் நிதி நிறுவனங்களின் ஊடாக சலுகைக் கடன் பரிந்துரைப் பொறிமுறைகள்.

பயனாளிகளை அடையாளம் காணல், சேதங்களை சரிபார்த்தல், இழப்பிற்கான சான்றளிப்பு, மற்றும் கொடுப்பனவு அட்டவணைகளின் சமர்ப்பித்தல் ஆகியவற்றிற்குப் பொறுப்பான பிரதான கள மட்ட நடைமுறைப்படுத்தல் அதிகாரிகளாக பிரதேச செயலாளர்கள் பெயர் குறிக்கப்பட்டுள்ளனர்.

தொழில்முயற்சிகளின் மட்டத்திலான உதவிகளை விரிவுபடுத்தி அவற்றை வகைப்படுத்துகின்ற **08/2025(i) ஆம் இலக்க வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கையை**[54] 2025, டிசம்பர் 20 ஆம் திகதி அமைச்சு வெளியிட்டது. சுற்றறிக்கை பின்வருவனவற்றைக் குறித்துரைக்கின்றது:

- பௌதிக அல்லது தொழிற்பாட்டு இழப்பை எதிர்கொண்ட பதிவு செய்யப்பட்ட நுண் அல்லது சிறு தொழில்முயற்சிகளுக்கு ரூ. 200,000 வரையிலான ஒரு தடவையில் மேற்கொள்ளப்படும், மீளச் செலுத்தப்படத் தேவையற்ற மானியங்கள். பதிவு செய்யப்படாத வீடுகளை அடிப்படையாகக் கொண்ட வியாபாரங்கள் மற்றும் உற்பத்தி அலகுகளுக்கான ரூ. 50,000 மானியங்கள்.
- நடமாடும், நடைபாதை மற்றும் தற்காலிக வியாபாரிகளுக்காக ரூ. 25,000 மானியங்கள்.
- சிறிய கட்டமைப்புசார் சேதங்களுக்கான தொழில்நுட்ப மதிப்பீடு இன்றி ரூ. 500,000 வரையான கட்டடத் திருத்த உதவி.
- கணிசமான அல்லது பாரிய கட்டமைப்புசார் சேதத்தைத் தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையொன்று உறுதிப்படுத்துமிடத்து, ரூ. 5, 000,000 வரையான கட்டடத் திருத்த அல்லது மீள் நிர்மாண உதவி.

கிராம அலுவலரின் உறுதிப்படுத்தல், புகைப்படச் சான்று, மற்றும் பிரதேச மட்ட சரிபார்த்தற் குழுக்கள் உள்ளடங்கலான ஆவணத் தேவைப்பாடுகளை இந்த சுற்றறிக்கை குறித்துரைக்கின்றது.

தொழில்முயற்சிகளுக்கான மானியக் கடன்களின் வரம்புகளை அறிமுகம் செய்து, 2026, சனவரி 22 ஆம் திகதி, **08/2025(iii) ஆம் இலக்க வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கையை**[55] அமைச்சு வெளியிட்டது:

- நுண் தொழில்முயற்சிகளுக்கு ரூபா 250,000;
- சிறு தொழில்முயற்சிகளுக்கு ரூபா 1,000,000;
- நடுத்தர மற்றும் பாரிய தொழில்முயற்சிகளுக்கு ரூபா 25, 000,000 வரை.

வருடாந்தம் 3% என்னும் ஒரு நிலையான வட்டி வீதம், ஓர் ஆறு மாத கருணைக் காலம், மற்றும் மூன்று வருடங்கள் வரையிலான மீள்கொடுப்பனவுக் காலம் என்பவற்றினைக் கடன்கள் கொண்டுள்ளன. அரசாங்க வட்டி மானிய ஏற்பாடுகளின் கீழ் இத்தகைய கடன்களை

[53] https://www.treasury.gov.lk/api/file/8322d7b1-c343-4a47-a4c3-27a1c7baa7ec
[54] https://www.treasury.gov.lk/api/file/a50e4973-227b-4b84-acf2-42748ac25738
[55] https://www.treasury.gov.lk/api/file/8d93c8ad-5091-4f96-b486-6972c63212dc

செயற்படுத்துவதற்கும் தனித்தனியாக கடன் பட்டியல் கண்காணிப்பைப் (portfolio tracking) பேணுவதற்கும் பங்குபற்றும் வங்கிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

### E. வீடுகளின் சேதம் மற்றும் மீள் நிர்மாணத்திற்கான இழப்பீடு

டித்வா சூறாவளியைத் தொடர்ந்து, வீடுகளின் சேத மதிப்பீடு, நிவாரணம், மற்றும் மீள் நிர்மாணம் என்பவற்றிற்கான நிர்வாக சட்டகம் ஒன்றினைத் தாபித்து, **01/2025 ஆம் இலக்க அனர்த்த நிவாரண சேவைகள் சுற்றறிக்கையை[56]**, ஓர் இணைந்த திருத்தம்[57], மற்றும் வழிகாட்டல்கள்[58] என்பவற்றுடன் அரசாங்கம் வெளியிட்டது. இந்தச் சுற்றறிக்கை, மாவட்ட மட்டத்தில் வீடுகளின் சேதம் மற்றும் மீள் நிர்மாணத் தொழிற்பாடுகளுக்கான ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பாளர்களாக மாவட்டச் செயலாளர்களைப் பெயர் குறிப்பதுடன், பயனாளிகளின் பதிவுகள் மற்றும் செலவினப் பதிவுகளைப் பேணுவதற்கு பிரதேச செயலாளர்களுக்கும் நிரல் முகவராண்மைகளுக்கும் பணிப்புரை விடுப்பதற்கும் அவர்களுக்கு அதிகாரமளிக்கின்றது.

நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட **வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கைகள் 08/2025[59]** மற்றும் **08/2025 (i)[60]**, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிதிச் சட்டகத்தை முறைசார்ந்ததாக ஆக்கின. சுற்றறிக்கைகள் பின்வருவனவற்றை ஏற்பாடு செய்கின்றன:

- உடனடிக் காசு முற்பணம்: சேதமடைந்த வீடுகளைச் சுத்தம் செய்தல் மற்றும் புனரமைத்தலுக்காக குடும்பத்திற்குத் தலா ரூ. 25,000;
- வீட்டு/சமையலறை அத்தியாவசியப் பொருட்கள்: ரூ. 50,000;
  மாதாந்த வாழ்விட அல்லது வாடகை உதவி: பொருத்தமானவாறாக;
- முழுயாக அழிவடைந்த வீடுகளின் மீள் நிர்மாணத்திற்கான மானியங்கள்: ரூ. 5,000,000 வரை;
- இறப்பு இல்லது முழுமையான இயலாமைக்கான இழப்பீடு: ரூ 1,000,000 வரை.

பாதுகாப்பு அமைச்சினால் **2025, நவம்பர் 30 ஆம் திகதி [61] மற்றும் டிசம்பர் 2 ஆம் திகதிகளில்**[62] **வெளியிடப்பட்ட NDRSC/02/04/10 ஆம் சுற்றறிக்கைகள்,** டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடனடியாக காசு முற்பணங்களையும் படிகளையும் வழங்குவதற்கு அங்கீகாரமளித்ததுடன் இதனால் முழுமையான மீள் நிர்மாணத்தின் முன்னர் சேதமடைந்த வீடுகளில் பாதுகாப்பாக மீளக் குடியமர்தலையும் இயலச் செய்தன. 2465/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின்[63] கீழ் பிரகடனம் செய்யப்பட்ட தேசிய அனர்த்தப் பிரதேங்களிலுள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் இந்த சுற்றறிக்கைகள் ஏற்புடையதாக அமையும்.

**2026, சனவரி 6 ஆம் திகதி**, வீடுகளுக்கான இழப்பீடு மீதான வழிகாட்டல்களைக் கொண்ட **NDRSC/02/04/10** ஆம் சுற்றறிக்கையை தேசியக் கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின்

---

56 https://ocges.gov.lk/pdf/2025-07-E.pdf

57 https://ocges.gov.lk/pdf/2025-08-E.pdf,

58 https://civilsocietycollectiveforemergencyresponse.wordpress.com/wp-content/uploads/2025/12/disaster_relief_services_guideline_012025.pdf

59 https://www.treasury.gov.lk/api/file/8322d7b1-c343-4a47-a4c3-27a1c7baa7ec

60 https://www.treasury.gov.lk/api/file/a50e4973-227b-4b84-acf2-42748ac25738

61 https://civilsocietycollectiveforemergencyresponse.wordpress.com/wp-content/uploads/2025/12/e0b6bbe0b794.10000.00e0b69a-e0b685e0b6ade0b78ae0b6ade0b792e0b69ae0b78fe0b6bbe0b6b8e0b69ae0b78a-e0b6bde0b6b6e0b78fe0b6afe0b793e0b6b8.pdf

62 https://civilsocietycollectiveforemergencyresponse.wordpress.com/wp-content/uploads/2025/12/e0b686e0b6b4e0b6afe0b78f-e0b783e0b784e0b6b1-e0b6bde0b6b6e0b78f-e0b69ce0b790e0b6b1e0b793e0b6b8-1.pdf

63 https://documents.gov.lk/view/extra-gazettes/2025/12/2465-08_E.pdf

ஒருங்கிணைப்புடன், பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டது[64]. கட்டமைப்புசார் முழுமையின் அடிப்படையில் வீடுகளுக்கான சேதத்தை வழிகாட்டல்கள் வகைப்படுத்துகின்றன:

- 65 வீதத்தை விஞ்சும் கட்டமைப்புசார் சேதங்களைக் கொண்டுள்ள வீடுகள் அல்லது தேசியக் கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தினால் பாதுகாப்பற்றதென சான்றளிக்கப்பட்ட வீடுகள் ஆகியவை ரூ. 5,000,000 வரையான மீள் நிர்மான மானியஙகளைப் பெறுவதற்கு உரித்துடையவை.
- பகுதியளவில் சேதமடைந்த வீடுகள், தீவிரத்தன்மையின் பிரகாரம் தரப்படுத்தப்பட்ட இழப்பீட்டுத் தொகுதிகளைப் (compensation bands) பெறுகின்றன.
- தங்களது சொந்தக் காணியில் மீள் நிர்மாணத்தை மேற்கொள்ளும் பயனாளிகள், நிர்மாணத்தின் முன்னேற்றம் சரிபார்க்கப்படுவதுடன் தொடர்புபடும் வகையில் படிப்படியான பணப் பிரித்தளிப்புகளைப் பெறுவர்.
- காணிகளற்ற பயனாளிகள், தகுதி மற்றும் கிடைப்பனவு ஆகியவற்றிற்கு உட்பட்டு, அரச காணி ஒதுக்கீட்டிற்காக அல்லது அரசாங்கத்தால் நிர்மாணிக்கப்படும் வீட்டு அலகுகளுக்காகப் பரிசீலிக்கப்படலாம்.

பயனாளிகளின் பட்டியல்களைத் தயாரித்தல் மற்றும் பேணுதல், மீள் நிர்மாணத்தின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல், அத்துடன் பணப் பிரித்தளிப்பிற்கான தகைமைக்கு சான்றளித்தல் என்பவற்றிற்கு பிரதேச செயலாளர்கள் பொறுப்பாவர்.

## F. விவசாயம், கால்நடை மற்றும் மீன்பிடி நிவாரணம்

டித்வா சூறாவளியினால் பாதிக்கப்பட்ட விவசாய, கால்நடை, மற்றும் மீன்பிடித் துறைகளுக்கான நிவாரணம் மற்றும் இழப்பீடுகள், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்ட **2025, டிசம்பர் 5 ஆம் திகதியிடப்பட்ட 08/2025 ஆம் இலக்க வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கையினால்**[65] **தாபிக்கப்பட்ட தேசிய அரசிறை நிவாரணச் சட்டகம்**, அத்துடன் அதனைத் தொடர்ந்த நடைமுறைப்படுத்தற் சுற்றறிக்கைகளான **2025, டிசம்பர் 20 ஆம் திகதியிடப்பட்ட 08/2025(i) ஆம் இலக்க**[66] மற்றும் **2026, சனவரி 22 ஆம் திகதியிடப்பட்ட 08/2025(iii) ஆம் இலக்க**[67] சுற்றறிக்கைகள் என்பவற்றின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

### 1) கால்நடை வளர்ப்புத் தொழிற்துறைக்கான இழப்பீடு

கால்நடை வளர்ப்புத்துறையில் ஏற்பட்ட இழப்பு அல்லது சேதத்திற்கான இழப்பீடு மானிய உதவியாக வழங்கப்படுகின்றது. டித்வா புயலின் விளைவாக விலங்குகள், விலங்குகளின் புகலிடங்கள், உபகரணங்கள், அல்லது உற்பத்திக் கொள்திறன் என்பவற்றில் இழப்பை அல்லது சேதத்தை எதிர்கொண்ட பதிவுசெய்யப்பட்ட பண்ணைகளும் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவோரும் தகுதி வாய்ந்த பயனாளிகளுள் உள்ளடங்குகின்றனர் துறைசார் அறிவுறுத்தல்களின் கீழான குறிப்பீட்டு நிவாரணங்களின் வரம்புகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- கலப்பினக் கால்நடைகள்: ஆகக்கூடிய எண்ணிக்கையொன்றிற்கு உட்பட்டு, **விலங்கொன்றிற்கு ரூ. 200,000 வரை;**
- உள்நாட்டுக் கால்நடைகள்: ஆகக்கூடிய எண்ணிக்கையொன்றிற்கு உட்பட்டு, **விலங்கொன்றிற்கு ரூ. 50,000 வரை;**
- பன்றிகள்: **விலங்கொன்றிற்கு ரூ. 20,000** வரை;
- ஆடுகள் மற்றும் செம்மறியாடுகள்: **விலங்கொன்றிற்கு ரூ. 20,000 வரை**;
- கோழிகள்: முட்டையிடும் கோழிகள் மற்றும் புரொயிலர்களுக்கு வித்தியாசப்படுத்தப்பட்ட தொகைகள்;

---

64 https://www.adaderana.lk/news.php?nid=116936
65 https://www.treasury.gov.lk/api/file/8322d7b1-c343-4a47-a4c3-27a1c7baa7ec
66 https://www.treasury.gov.lk/api/file/a50e4973-227b-4b84-acf2-42748ac25738
67 https://www.treasury.gov.lk/api/file/8d93c8ad-5091-4f96-b486-6972c63212dc

- வீடுகளில் உள்ள கோழி வளர்ப்பு அலகுகள்: நிலையான அலகு அடிப்படையிலான மானியம்.

கிராம அலுவலர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுடனான ஒருங்கிணைப்புடன், கால்நடை உற்பத்தி, மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் அலுவலர்களின் களப் பரிசோதனைகளின் ஊடாக தகைமை மற்றும் இழப்புகளின் அளவு என்பன சரிபார்க்கப்படுகின்றன. இழந்த விலங்குகளின் பெறுமதியை மானியங்கள் இழப்பீடாக வழங்குவதுடன், விலங்குகளுக்கான சிகிச்சை, விலங்குணவுகளின் பதிலீடு, மற்றும் சிறியளவிலான கட்டமைப்புத் திருத்தங்கள் ஆகியவற்றிற்கான மட்டுப்படுத்தப்பட்ட ஆதரவு என்பவற்றையும் உள்ளடக்கலாம்.

**2) பயிர்ச்சேதங்களுக்கான நிவாரணம்**

டித்வா புயலின் விளைவாக அழிவடைந்த, நீரில் மூழ்கிய, அல்லது பயனற்றதாக ஆக்கப்பட்ட பயிர்களுக்கு ஒரு தடவை அளிக்கப்படும் பயிர்ச்சேத மானியங்கள் வழங்கப்படுகின்றன. நடைமுறைப்படுத்தும் முகவராண்மைகளினால் பிரயோகிக்கப்படும் குறிப்பீட்டு மானிய வீதங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- நெல் மற்றும் பிரதான பயிர்கள்: ஹெக்டேயரின் பிரகாரம் மானியங்கள்;
- மரக்கறிகள் மற்றும் உயர் பெறுமதி கொண்ட வருடாந்தப் பயிர்கள்: ஹெக்டேயரின் பிரகாரம் உயர்வான மானியங்கள்;
- பல்லாண்டுப் பயிர்கள் மற்றும் சிறியளவிலான ஏற்றுமதிப் பயிர்கள்: பயிரின் வகை, வயது, வளர்ச்சிக் கட்டம், மற்றும் சரிபார்க்கப்பட்ட இழப்பின் சதவிகிதம் என்பவற்றினால் மானியம் நிர்ணயிக்கப்படுகின்றது.

கமநல சேவை நிலையங்கள், கிராம அலுவலர்கள், மற்றும் விவசாயத் திணைக்களத்தின் கள அலுவலர்கள் அல்லது உரிய தொழில்நுட்ப முகவராண்மைகளினால் பயிர்ச்சேதம் சரிபார்க்கப்படுகின்றது. பிரதேச செயலாளர்கள் பயனாளிகளின் பட்டியல்களைத் தொகுத்து, திறைசேரியின் விடுவிப்பிற்காக மாவட்ட நிர்வாக வழிமுறைகளின் ஊடாக சான்றளிக்கப்பட்ட அட்டவணைகளை அனுப்பி வைப்பர்.

**3) மீன்பிடி மற்றும் நீரியல்வள வாழ்வாதாரங்களுக்கான இழப்பீடு**

கடல், கரையோர, உள்நாட்டு மீன்பிடி மற்றும் நீரியல்வளத் துறைகளில் ஏற்படும் இழப்புகளுக்கு நிவாரணம் வழங்கப்படுகின்றது. நிவாரண நடவடிக்கைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- முழுமையாக அல்லது பகுதியளவில் சேதமடைந்த பதிவுசெய்யப்பட்ட மீன்பிடிக் கலங்களுக்கான மானிய உதவி;
- வலைகள் மற்றும் தொடர்புடைய கருவிகள் உள்ளடங்கலான சேதமடைந்த மீன்பிடி உபகரணங்களுக்கான மானிய உதவி;
- மீன்பிடி உபகரணங்கள், மீன் குஞ்சுகள் வழங்கல் மற்றும் மீன்பிடிக் குளங்கள், குஞ்சு பொரிப்பகங்கள் (hatcheries) மற்றும் நீரியல்வள வசதிகளின் புனரமைப்பிற்காக தொழில்நுட்ப உதவிகள்.

மீன்பிடிப் பரிசோதகர்கள், மீன்பிடிக் கூட்டுறவு சமாசங்கள், மற்றும் பிரதேச செயலாளர்களினால் சேத சரிபார்ப்பு மேற்கொள்ளப்படும். மாவட்ட நிர்வாக வழிமுறைகளின் ஊடாக கொடுப்பனவிற்கான சான்றளிக்கப்பட்ட பயனாளிகளின் பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படும்.

**4) பயிர்க் காப்புறுதிக்கான இழப்பீடு**

விவசாய மற்றும் விவசாயக் காப்புறுதிச் சட்டத்தின் கீழ் காப்புறுதி செய்யப்பட்ட பயிர்களுக்கான காப்புறுதிக் கோரல் செயன்முறைகளை விவசாய மற்றும் விவசாயக் காப்புறுதிச் சபை (AAIB) மேற்கொள்கின்றது.

பயிர்களுக்கான காப்புறுதியைக் கொண்டுள்ள விவசாயிகள், விவசாய சேவை நிலையங்கள் அல்லது AAIB இன் பிராந்திய அலுவலகங்களின் ஊடாக விதித்துரைக்கப்பட்ட அறிக்கையிடற் காலப்பகுதிகளினுள் கோரல்களைப் பதிவு செய்யலாம். பயிரின் வகை, பயிர்ச்செய்கைக் கட்டம், மற்றும் சரிபார்க்கப்பட்ட சேதத்தின் அளவு என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு கோரல்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. தற்போதுள்ள காப்புறுதிக் கொள்கை நிபந்தனைகள் மற்றும் நடைமுறைகளின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது.

### 5) பதிவு செய்யப்படாத விவசாயிகள் மற்றும் சிறுபற்றுநில விவசாயிகளுக்கான ஆதரவு

பதிவு செய்யப்படாத விவசாயிகள் மற்றும் சிறிய அளவிலான உற்பத்தியாளர்களுக்கு மனிதாபிமான உதவி வழங்கப்படுகின்றது. கள சரிபார்ப்பு, நிர்வாகப் பதிவுகள், கூட்டுறவுச் சங்கப் பட்டியல்கள், அல்லது கிடைக்கப்பெறும் ஏனைய உள்நாட்டுத் தரவு மூலங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பிரதேச செயலாளர்களினால் இதற்கான தகுதி நிர்ணயிக்கப்படுகின்றது. விதைகளுக்கான சிறியளவிலான மானியங்கள், நடுகைச் சாதனங்கள், உபகரணங்கள், மற்றும் அடிப்படை உள்ளீடுகள், அத்துடன் தொழில்நுட்ப விரிவாக்க சேவைகளுக்கான அணுகல் என்பவை உதவிகளில் உள்ளடங்கலாம்.

## G. பொது நிர்வாகத்தின் தொடர்ச்சி

சூறாவளி தாக்கியமை மற்றும் பரவலான உட்கட்டமைப்புச் சீர்குலைவைத் தொடர்ந்து, **2025 நவம்பர் 28 ஆம் திகதி**, நடைமுறைசார்ந்த அல்லது நிதிசார்ந்த தாமதங்கள் எவையுமின்றி மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்துமாறு மாவட்டச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர்கள் ஆகியோருக்கு சனாதிபதி பணித்ததுடன், தற்போதுள்ள நடைமுறைகளினால் எழும் நிர்வாகத் தடைகளை எதிர்கொள்வதற்கு சுற்றறிக்கை ஒன்றினை வெளியிடுமாறும் பொது நிர்வாக அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தல் வழங்கினார்; இந்தப் பணிப்புரை, கிடைக்கப்பெறும் நிதிகளையும் ஆளணியினரையும் அவசரகாலப் பதிற்செயற்பாட்டிற்காக உடனடியாகப் பயன்படுத்துவதற்கு உள்நாட்டு நிர்வாகத்தினருக்கு வலுவூட்டியது.[68]

இந்தப் பணிப்புரைக்கு மேலதிகமாக, தடைப்பட்ட போக்குவரத்துச் சேவைகள், வீதிகள் தடைப்பட்டமை, மற்றும் வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவுகள், மற்றும் தொடர்புடைய நிலைமைகள் உள்ளடங்கலான டித்வா சூறாவளியின் தாக்கங்களின் காரணமாகப் பணிக்கு சமுகமளிக்க இயலாத பகிரங்க அலுவலர்களுக்கு **விசேட விடுமுறையை** வழங்கி, பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, **2025, டிசம்பர் 15 ஆம் திகதியிடப்பட்ட 32/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையை**[69] வெளியிட்டது; கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலாளரினால் சான்றளிக்கப்பட்ட விடுமுறைக் கோரிக்கை ஒன்றினை சமர்ப்பிப்பதை இந்த சுற்றறிக்கை தேவைப்படுத்துவதுடன், தங்களது கட்டுப்பாட்டிற்கு அப்பால் காணப்பட்ட சூழ்நிலைகளினால் அலுவலர்கள் பணிக்கு சமுகமளிக்க முடியாது தடுக்கப்பட்ட நிலை ஏற்பட்ட காலப்பகுதிகளுக்கு ஏற்புடையதாகவும் அமைகின்றது. விசேட விடுமுறையின் விபரங்கள் நிறுவனத்தின் விடுமுறைப் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதுடன், இந்த ஏற்பாடு, குறிப்பாக, 2025 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களின் அனர்த்தக் காலப்பகுதிக்கு ஏற்புடையதாக அமையும்.

நிலவும் அவசரகால நிலைமைகளுக்கு மத்தியில் அத்தியாவசியத் தொழிற்பாடுகளைப் பேணுவதில் பகிரங்க அலுவலர்களின் தொடர்ச்சியான சேவையை அங்கீகரிப்பதற்கும் பாராட்டுவதற்கும், டித்வா சூறாவளிக்குப் பிந்திய காலப்பகுதியில் தொடர்ச்சியான சேவைகளை வழங்குவதிலும் சாதாரண அரசாங்கத் தொழிற்பாடுகளை மீட்டெடுப்பதிலும் பகிரங்க அலுவலர்களின் விசேட முயற்சிகளை ஏற்று அங்கீகரிக்கும் **2025, டிசம்பர் 30 ஆம் திகதிய 34/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையையும்**[70] அமைச்சு வெளியிட்டது.

[68] https://www.newswire.lk/2025/11/28/president-issues-new-circular-to-speed-up-disaster-relief-removes-financial-barriers/
[69] https://pubad.gov.lk/web/images/circulars/2025/E/1765796549-32-2025-e.pdf
[70] https://pubad.gov.lk/web/images/circulars/2025/E/1767080546-34-2025-e.pdf

சீர்குலைந்துள்ள பொதுமக்களின் வாழ்வு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மீட்டெடுக்கும் அதேவேளை, 2026 ஆம் ஆண்டினுள் நுழையும்போது நிலையான செயலாற்றுகையைக் கொண்டிருப்பதற்கான நிர்வாக எதிர்பார்ப்புகளையும் உறுதிப்படுத்தி, பாரியளவிலான அனர்த்த விளைவுகள் ஏற்பட்டுள்ள சூழமைவில் சமகாலத்தில் மீளக்கட்டியெழுப்புதலில் ஈடுபடுதல் ஆகிய பகிரங்க அலுவலர்கள் எதிர்கொள்ளும் இரட்டைச் சவால்களை இந்தச் சுற்றறிக்கை எடுத்துக் காட்டுகின்றது.

இத்தகைய குறிப்பிட்ட சுற்றறிக்கைகளுக்கு மேலதிகமாக, முக்கியமான பொதுத் தொழிற்பாடுகள் மற்றும் சேவை விநியோகத்தின் தொடர்ச்சியைப் பேணும் பொருட்டு, முதலாவதாக **2025, நவம்பர் 29 ஆம் திகதி**[71] வெளியிடப்பட்டு, 2025, டிசம்பர் மாதத்தில் [72] நீட்டிக்கப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களின் மூலம், **மாவட்ட செயலகங்கள், மற்றும் பிரதேச செயலகங்கள் மற்றும் அவற்றின் கள அலுவலர்களின் சேவை** உள்ளடங்கலான சேவைகளின் தொகுதி ஒன்றினை **அத்தியாவசிய சேவைகளாக** சனாதிபதியின் அதிகாரத்தின் கீழ் அரசாங்கம் பெயர் குறித்தது. மின்சாரம், நீர் வழங்கல், உணவு வழங்கல் சேவைகள், போக்குவரத்து, சுகாதார சேவைகள், தொலைத்தொடர்பாடல் மற்றும் அனர்த்தக் காலப்பகுதியின்போது பொது நிர்வாகத்தின் தொடர்ச்சிக்கு அவசியமான ஏனைய பிரதான துறைகள் என்பவற்றைப் பெயர் குறிக்கப்படும் அத்தியாவசிய சேவைகள் உள்ளடக்குகின்றன.

### F. அரச சார்பற்ற அமைப்புகள்/ வெளிநாட்டுப் பங்காளர் ஒருங்கிணைப்பு மற்றும் தொழிற்பாடுகள்

*''சீரற்ற காலநிலையின் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அரச சார்பற்ற அமைப்புகளின் ஒருங்கிணைப்பு''* என்னும் தலைப்பிடப்பட்ட **2025, நவம்பர் 29 ஆம் திகதிய MRDSS&CE/5/3/1/361 சுற்றறிக்கையை**[73] கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு, மற்றும் சமுதாய வலுவூட்டல் அமைச்சு வெளியிட்டது. உணவு வழங்கல், நீர், துப்புரவேற்பாடு, புகலிடம், மற்றும் வாழ்வாதார ஆதரவு என்பவற்றை வழங்குதல் உள்ளடங்கலான அரச சார்பற்ற அமைப்புகளின் அனைத்து நிவாரணச் செயற்பாடுகளும் ஒவ்வொரு பாதிக்கப்பட்ட மாவட்டத்திலும் மாவட்டத்தின் அரச சார்பற்ற அமைப்புகளின் ஒருங்கிணைப்பாளரின் ஊடாகவும் மாவட்டத்தின் அரச சார்பற்ற அமைப்புகளின் ஒருங்கிணைப்புக் குழுவின் ஊடாகவும் ஒருங்கிணைக்கப்பட வேண்டுமென சுற்றறிக்கை ஆணை வழங்குகின்றது. இரட்டித்தலைத் தவிர்த்து பாதிக்கப்பட்ட மாவட்டங்களினுள் அனைத்துப் பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் உள்ளடக்கத்தை உறுதிப்படுத்துகின்ற அதேவேளை இடையீடுகள் உகந்த நேரத்தில் மேற்கொள்ளப்படுதையும், தகுந்த விதத்தில் ஒழுங்கமைக்கப்படுவதையும், உண்மையான தேவைகளுக்கு பதிற்செயற்பாடாற்றுவதையும், அத்துடன் அரசாங்கத்தின் நிவாரண முன்னுரிமைகளுடன் நேரொத்ததாக அமைவதையும் உறுதிப்படுத்துதல் இதன் குறிக்கோளாகும்.

2025, ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில், **துரிதப்படுத்தப்பட்ட அனர்த்த நிவாரணத் தொழிற்பாடுகளுக்கான வழிகாட்டல்களை**[74] பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டது. இந்த வழிகாட்டல்கள், வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட இடையீடுகள் உள்ளடங்கலாக அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகளின் செயற்பாடுகளை மாவட்ட மட்ட நிவாரண ஒருங்கிணைப்புக் கட்டமைப்புகளினுள் கூட்டிணைப்பதற்கு மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களைப் பணிக்கின்றன. அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் நிவாரண நிகழ்ச்சிகளின் நடைமுறைப்படுத்தலை மேற்பார்வை செய்யும் குழுக்களுக்கான தொழிற்பாட்டு வகிபங்குகளை அவை எடுத்து விளக்குவதுடன் உத்தியோகபூர்வ மாவட்ட வழிமுறைகளின் ஊடாக அனைத்து வெளித் தரப்பினரதும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதையும் உறுதிப்படுத்துகின்றன.

---

[71] https://documents.gov.lk/view/extra-gazettes/2025/11/2464-29_E.pdf

[72] https://documents.gov.lk/view/extra-gazettes/2025/12/2468-46_E.pdf

[73] https://civilsocietycollectiveforemergencyresponse.wordpress.com/wp-content/uploads/2025/12/cso-coordination_ministry-of-rural-development.pdf

[74] https://english.newsfirst.lk/2025/12/14/minisry-of-defence-issues-guidelines-for-accelerated-disaster-relief-operations

2025, டிசம்பர் 23 ஆம் திகதி, "*டித்வா சூறாவளியினால் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தின் சூழமைவில், உள்நாடு மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த இருதரப்பு மற்றும் பல்தரப்பு வெளிப் பங்காளர்களுடனான ஈடுபாட்டிற்கான கட்டாய ஒருங்கிணைப்பு*" என்னும் தலைப்பிடப்பட்ட **ERD/SC/Gen-II சுற்றறிக்கையை**[75] வெளியக வளங்கள் திணைக்களம் வெளியிட்டது. அனைத்து அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள், மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகள் உள்ளடங்கலான பங்காளர்களின் தரப்புகள் ஆகியவை வெளிநாட்டு இருதரப்பு மற்றும் பல்தரப்புப் பங்காளர்களுடன் மேற்கொள்ளும் அனைத்து இடைவினைகளையும் அரசாங்கத்தினால் பெயர் குறிக்கப்படும் வழிமுறைகளின் ஊடாக ஒருங்கிணைக்க வேண்டும் என இந்தச் சுற்றறிக்கை தேவைப்படுத்துகின்றது. டித்வா சூறாவளிக்கான பதிற்செயற்பாடாக ஒன்றுதிரட்டப்படும் உதவிகள் மீதான தொடர்ச்சியான ஈடுபாட்டை உறுதிப்படுத்தல், இரட்டிப்பாதலைத் தடுத்தல், பொறுப்புக்கூறலைப் பேணுதல், மற்றும் மேற்பார்வையை வழங்குதல் ஆகியவை இதன் நோக்கங்களாகும்.

2025, டிசம்பர் மாதத்தில், **வெளிநாட்டு நிவாரணப் பொருட்களை அனுப்புவதற்கான வழிகாட்டல்களை** அனர்த்த முகாமைத்துவ நிலையம் (DMC) வெளியிட்டது.[76]. இந்த வழிகாட்டல்கள், இறக்குமதி செய்யப்படும் அனைத்து நிவாரண சரக்குகள் தொடர்பிலும் முன்கூட்டிய அறிவித்தல் வழங்குவதற்கும், ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கும், விடுகைக்கான அனுமதி பெறுவதற்கும் அரச சார்பற்ற அமைப்புகள், சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகள், மற்றும் வெளிநாட்டுத் தூதரகங்கள் என்பவற்றைத் தேவைப்படுத்துகின்றன. அனைத்து வெளிநாட்டு நிவாரண உதவிகளும் முறைமைசார் விதத்தில் உத்தியோகபூர்வ அரசாங்க விநியோகத் திட்டமிடலில் ஒருங்கிணைக்கப்படுகின்றன என்பதை இந்த வழிகாட்டல்கள் உறுதிப்படுத்துகின்றன.

## 7. வெளிநாட்டு ஆதரவிற்கான அரசாங்கத்தின் கோரிக்கை

டித்வா சூறாவளியின் பேரழிவான தாக்கத்தினைத் தொடர்ந்து, சர்வதேச அனர்த்த நிவாரணம் மற்றும் மனிதாபிமான ஆதரவுக்காக இலங்கை அரசாங்கம் அதிகாரபூர்வமாகக் கோரிக்கை விடுத்தது. 2025, நவம்பர் 29 ஆம் திகதி, சனாதிபதி நாடு முழுவதும் அவசரகால நிலைமையைப் பிரகடனம் செய்ததுடன், சமகாலத்தில், பதிற்செயற்பாட்டு மற்றும் மீட்டெடுப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவைப் பெறுவதற்காக சர்வதேச சமூகத்திடமிருந்து உடனடி அனர்த்த நிவாரண மற்றும் மனிதாபிமான உதவியையும் கோரினார்[77].

2025, டிசம்பர் 3 ஆம் திகதி, தூதரகங்கள், இருதரப்பு மற்றும் பல்தரப்பு அபிவிருத்திப் பங்காளர்கள், அத்துடன் சர்வதேச நிதி நிறுவனங்கள் ஆகியவற்றை ஒன்றிணைத்து, திறைசேரியின் செயலாளர் மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் ஆகியோர் இணைத் தலைவர்களாகத் தலைமை தாங்கிய உயர்மட்ட நன்கொடையாளர் மன்றம் ஒன்றினை அரசாங்கம் கூட்டியது. இதில். பொது நிர்வாக அமைச்சு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, அனர்த்த முகாமைத்துவ நிலையம், மற்றும் திறைசேரித் திணைக்களம் ஆகியவற்றைச் சேர்ந்தோர் உள்ளடங்கலான சிரேஷ்ட அரசாங்கப் பிரதிநிதிகள் சேத மதிப்பீடுகளை சமர்ப்பித்ததுடன், வெளிநாட்டு ஆதரவுக்கான அவசர தேவைகளை, குறிப்பாக துரித மனிதாபிமான உதவி, சலுகை நிதியுதவி, உணவுப் பொருட்கள் மற்றும் நடுத்தரகால உதவிகள் ஆகியவற்றிற்கான தேவையை எடுத்துக் கூறினர். அவசரகால நிலைமையின்போது இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான தங்களது அர்ப்பணிப்பைப் பங்காளர்களின் பிரதிநிதிகள் மீள உறுதிப்படுத்தினர்.[78]

2025, டிசம்பர் 4 ஆம் திகதி, பிரதம அமைச்சர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஆகியோர் இணைத் தலைவர்களாகக் கலந்து கொண்ட இராஜதந்திர

---

[75] https://www.erd.gov.lk/images/2025/Mandatory_Coordination_for_the_Engagement_with_External_Bilateral_and_Multilateral_Partners_both_Local_and_Foreign_in_View_of_the_Natural_Disaster_Caused_by_Ditwah_Cyclone.pdf; https://www.erd.gov.lk/index.php?Itemid=219&id=55&lang=en&option=com_content&view=article

[76] https://www.dmc.gov.lk/images/pdfs/Relief_%20Items_%20%20Communities_%20Cyclone%20Ditwah.pdf

[77] https://srilanka.un.org/en/307212-cyclone-ditwah-situation-report-16-december-2025

[78] https://www.news.lk/current-affairs/international-development-partners-pledge-strong-support-for-sri-lankas-relief-and-recovery-after-cyclone-ditwah

விளக்கக் கூட்டம் நடைபெற்றது. இதில் சூறாவளியால் ஏற்பட்ட பரவலான சேதத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் தேசிய நிவாரண முயற்சிகள், மீட்டெடுப்பு முன்னுரிமைகள் மற்றும் மீள் நிர்மாணத் திட்டமிடல் ஆகியவை மீதான இற்றைப்படுத்தல் வெளிநாட்டுத் தூதரகங்கள் மற்றும் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச அமைப்புகளுக்கு வழங்கப்பட்டது. இந்த விளக்கக் கூட்டத்தில், தூதரகங்கள் வழங்கிய ஆதரவிற்கு நன்றி தெரிவித்த பிரதம அமைச்சர், அத்தியாவசிய சேவைகளின் மீட்டெடுப்பு, போக்குவரத்து உட்கட்டமைப்பு மறுசீரமைப்பு மற்றும் நீர் மற்றும் துப்புரவேற்பாடு அத்துடன் பரந்த மீள் நிர்மாண முயற்சிகள் உள்ளடங்கலான முன்னுரிமை விடயப்பரப்புகளுக்குப் பங்களிக்குமாறும் சர்வதேசப் பங்காளர்களுக்கு அழைப்பு விடுத்தார்[79].

2025, டிசம்பர் 11 ஆம் திகதி, ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் மனிதாபிமானப் பங்காளர்கள் இணைந்து மனிதாபிமான முன்னுரிமைகள் திட்டத்தை (HPP) ஆரம்பித்தனர். டித்வா சூறாவளியினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு உயிர் காக்கும் உதவிகளை வழங்குவதற்கு 35.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி திரட்டுவதற்கான நோக்குடன் இது உருவாக்கப்பட்டது. இந்தத் திட்டம், இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கைகளையும், அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் கூட்டாக மேற்கொள்ளப்பட்ட துரித தேவைகள் மதிப்பீடுகளையும் பின்பற்றி ஏற்படுத்தப்பட்டது. இது, உணவுப் பாதுகாப்பு, சுகாதாரம், பாதுகாப்பு, தங்குமிடம், நீர்/துப்புரவேற்பாடு மற்றும் ஆரம்ப மீட்டெடுப்பு உள்ளடங்கலான சர்வதேச ஆதரவு அவசியமான துறைகளைக் எடுத்துக் காட்டுகின்றது. HPP திட்டம், 2025 டிசம்பர் முதல் 2026 ஏப்ரல் வரை அண்ணளவாக மிகவும் பாதிப்புறு நிலையிலுள்ள 6,58,000 மக்களுக்கு உதவி வழங்குவதை இலக்காகக் கொண்டுள்ளது என்பதுடன் இருதரப்பு மற்றும் பல்தரப்பு நன்கொடையாளர் சமூகத்திடம் ஐ.நா. முன்வைத்த ஒருங்கிணைந்த நிதி கோரிக்கையையும் உறுதிப்படுத்துகின்றது.[80]

ஐ.நா.வின் உடனடிப் பதிற்செயற்பாட்டுப் பொறிமுறையின் பகுதியாக, பாதிக்கப்பட்ட சமூகங்களில் அவசர உணவு உதவி, தங்குமிட ஆதரவு மற்றும் நீர், துப்புரவேற்பாடு மற்றும் சுகாதார சேவைகளை வலுப்படுத்துவதற்காக, ஐ.நா. மத்திய அவசரநிலை பதிற்செயற்பாட்டு நிதியம் (CERF) 4.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கீடு செய்தது. கோரிக்கை விடுக்கப்பட்டு குறுகிய காலத்தினுள் இந்த நிதி ஒதுக்கீடு கிடைக்கச் செய்யப்பட்டதுடன், இலங்கையின் தேசிய பதிற்செயற்பாட்டுடனான ஐ.நா.வின் பல்தரப்பு ஈடுபாட்டின் ஒரு பகுதியாகவும் இது உள்ளது.[81]

---

[79] https://www.pmoffice.gov.lk/news.php?para=RU5vekFVR2dpQTd2VGRiMkZUNE4wS1Z4dHdxY0h2MkZGYlRoRGtYa1J4RnQ0aUF1SzVUSjFCbHNYMEJEaURYSw==

[80] https://srilanka.un.org/en/306891-united-nations-and-humanitarian-partners-call-us35-million-provide-life-saving-assistance

[81] https://srilanka.un.org/en/306739-united-nations-allocates-us45-million-its-global-emergency-fund-support-sri-lankans-affected